# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



மார்ச் - 2003

12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


மார்ச் - 2003

மலர் 35 ❄ இதழ் 02

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்



முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 26486



விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


அன்புடன் உங்களோடு - 1
தவக்காலத்தில்......... - 2
பலவானாய் மாற்றும் - 3
மனித மேம்பாட்டுக்கு.......... - 4
மாணவர் பக்கம் - 6
நியாயத் தராசு - 8
ஒப்புரவு - 9
இலக்கங்கள் வெளியிடும்......... - 10
ஒரு புதிய மனிதன் - 11
பொது அறிவு - 12
தாகத்துக்கு மரணம் - 13
சிறாரடிமை - 15
நடனமாட நீங்கள்.......... - 16
மட்டக்களப்பு மறக்க........... - 17
இலக்கிய மஞ்சரி - 20
பிலிப்பைன்சில் நடைபெற்ற......... - 21
பரிசுப் போட்டி - 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு..



மீண்டும் ஒரு தவக்காலம்
மனமாற்றம் பெற, ஒப்புரவு காண இறைவன் விடுக்கும்
அன்பான அழைப்பு.
வேண்டாம் என்று விலகிச் செல்லும் ஊதாரிப்
பிள்ளைகளாக நாம் எத்தனை நாள் வாழ்ந்து
கொண்டிருக்கப் போகிறோம்?
கானல் நீரை நிஜமென்று நம்பி
கனவுலகில் நாம் வாழ்ந்தது போதும்.
விழித்தெழ வேண்டிய நேரம் வந்துள்ளது;
- காலம் கனிந்துள்ளது!

ஆன்மீகத்தில் மட்டுமல்ல, அரசியலிலும்,
சமுகத்திலும் இதே நிலைமை தான்
அவநம்பிக்கைகளைக் களைந்து, நம்பிக்கையைக்
கட்டி எழுப்புவோம்.
பகையை மறந்து உறவுக்குப் பாதை சமைப்போம்
பழி நிறைந்த பழங்கதைகளைக் கணக்குப்
பார்க்காது அடைய வேண்டிய இலக்குகளை
- அலசுவோமா?

இது நல்ல தருணம் - நாம்
கைகோர்ப்பதற்கு, புரிந்து கொள்வதற்கு,
ஏற்றுக்கொள்வதற்கு, மன்னிப்பதற்கு,
கனவு காணும் சமாதானத்தை நோக்கி
கால்வைத்து நடப்பதற்கு.
இனியும் தடை என்ன?

தந்தை காத்து நிற்கிறார்
தனயனின் வரவை எண்ணி.
எழுந்து வருகிறார், இதமாக
அணைத்துக் கொள்ள.

நம்மிடத்தே உள்ள
அதிகாரச் செருக்குகள்
அகங்கார மனோபாவங்கள்
அவதந்திரங்கள், அவநம்பிக்கைகள்
உடைந்து நொருங்கட்டும்!

இழக்காது எதையும் பெற முடியாது:
கொடுக்காது எதையும் அடைய முடியாது.
இது கல்வாரி கற்றுத் தரும் பாடம் - நாம்
கசடறக் கற்க வேண்டிய வேதம்

தவக்காலம் மீண்டும் கடை விரித்துள்ளது
நாம் வாங்க வேண்டியது சமாதானம்
வாருங்கள்! கடவுளோடும் சகமனிதரோடும்
சமரசம் செய்து கொள்வோம்.

இணை ஆசிரியர்






## இறைவாக்கு

மக்களே! என்னிடம் திரும்பி வாருங்கள்: ஏனெனில் நானே உங்கள் தலைவன்.

- எரேமியா: 3/14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலத்தில் பயிற்சியும் வளர்ச்சியும்

கிறிஸ்துவ வாழ்வென்பது புதிய தொடக்கங்களின் வரலாறு. நாம் நமது வாழ்வைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ளும் வாய்ப்பானது இக்கிறிஸ்துவ வாழ்வில் நமக்கு வழங்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாக இந்தத் தவக்காலம் நாம் மாறுவதற்கான வாய்ப்பை ஒவ்வோர் ஆண்டும் நமக்குத் தருகின்றது. நாம் எவ்வளவு பெரிய பாவங்கள், குழப்பங்களில் சிக்கியிருந்தாலும் அவை அனைத்தையும் விட்டு விட்டு புதிய முடிவுடன் வாழ்க்கைப் பயணத்தைப் புதிதாகத் தொடர இத் தகவக்காலம் வழிகாட்டுகிறது. புதிய யுகத்தில் புது நம்பிக்கைகளுடன் நுழைந்திருக்கின்ற நாம் நமது வாழ்வில் இன்றும் மாற்றிக்கொள்ள வேண்டிய காரியங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இப்படிச் சீர்தூக்கிப் பார்க்க உதவுவது இத்தவக்காலம். இக்காலத்தைப் பற்றிய இரண்டு கருத்துக்களை இன்று சிந்திப்போம். 1. இது வளர்ச்சியின் காலம், 2. இது பயிற்சியின் காலம்.

## இது வளர்ச்சியின் காலம்

அதாவது நமது குற்றங்குறைகளில் நாம் மூழ்கிப்போகாது இறைவன் தரும் நற்செய்தியை ஏற்று வளர்ச்சி பெறவேண்டிய காலம். மண்ணுலகை வெள்ளத்தால் அழிக்கப் போவதில்லையென்று நோவாவுக்கு கடவுள் வாக்குறுதியளித்தார் (தொநூ 9:14-15). அதாவது கடவுள் அழிவை அல்ல, மீட்பையே விரும்புகின்றார் என்பது இதில் புலனாகிறது. இந்த மீட்பைப் பெற்றுத் தந்து அனைவரையும் தந்தையிடம் வழி நடத்திச் செல்வதற்காகத்தான் கிறிஸ்து இறந்தார் என்று புனித பேதுரு கூறுகிறார் (1பேது 3:18) எனவே இந்த வாழ்வையும், மீட்பையும் விரும்பும் கடவுளிடம் நாம் நம்பிக்கையோடு வரவேண்டும். நமது முறையற்ற வாழ்க்கையினால் சோர்ந்து நம்பிக்கையிழந்து போகக் கூடாது. இது தான் நாம் பெற வேண்டிய வளர்ச்சி.

இரண்டாவது இது பயிற்சியின் காலம் : இயேசு திருமுழுக்குப் பெற்றதும் நாற்பது நாள் பாலை நிலத்தில் ஒரு பயிற்சியை மேற்கொண்டு தீமையை முறியடிக்கிறார் (மாற் 1: 12-13). நாமும் நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும். நாமும் பாலைவன அனுபவம் பெற வேண்டும். அதாவது நமது குறைகளில் தலையானவை எவை என்பதைக் கண்டறிந்து அவற்றை நிறுத்துவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். நோன்பிருந்து செபிப்பது, பல தவ முயற்சிகளை மேற்கொள்வது, முறிந்து போன உறவுகளைக் கட்டி எழுப்புவது போன்றவை நம்மை இப்படிபட்ட பயனுள்ள பாலைவன அனுபவத்திற்கு இட்டுச் செல்லும் வழி முறைகள். நமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒருமுகப்படுத்திப் பயிற்றுவிக்க இது வழி வகுக்கும். எனவே தவக்காலம் ஒரு பயிற்சியின் காலம்.

எனவே இத்தவக்காலத்தை நம்பிக்கையோடு தொடங்குவோம். இக் காலத்தில் நாம் பெறுகின்ற வளர்ச்சியும், பயிற்சியும் நிச்சயம் நம்மை உயிர்ப்புத் திருநாளில் மகிழ்ச்சியுடன் பங்கு பெறச் செய்யும்.

– அருள் திரு. போல் ராஜ் –




## இரத்தினபுரி மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்

இரத்தினபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக 52 வயதான அருள் தந்தை கரல்ட் அன்ரனி பெரேரா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மறைமாவட்டத்தை சேர்ந்த இவர் இதுவரை காலமும் கண்டி தேசிய குருமடத்தின் மெய்யியல் துறை இயக்குனராக பணி புரிந்து வந்தார். நீர் கொழும்பு பமுனகம என்ற இடத்தில 1951ம் ஆண்டு பிறந்த இவர் 1980ம் ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். கடந்த காலங்களில் கண்டி தேசிய குரு மடத்தின் நிதியாளராகவும் கொழும்பு மறை மாவட் டத்தின் நீதித்துறை முதல்வராகவும் இவர் பணியாற் றியுள்ளார். இரத்தினபுரி ஆயராகவிருந்த மல்கம் ரஞ்சித் அவர்கள் நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தின் தலைவராகப் பணியேற்று உரோமைக்குச் சென்ற பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை தொடர்ந்து திருத்தந்தை 2ம் அருளப்பர் - சின்னப்பர் அவர்களால் கடந்த ஜனவரி 29ம் திகதி இந்நியமனம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவானாய் மாற்றும்



ஏசுவே எனக்குஉன் வழியைக் காட்டும் - தினம்
இடராதுன் வழிசெல்ல சக்திதாரும்
நீசவழி விட்டென்னை நடக்கச் செய்யும் - நான்
நித்தமும் நினைநாட அருள் புரியும்.

உன் அழைப்பு என்னவென்று எனக்குச் சொல்லும் - அதை
உவப்போடு ஏற்றிடநல் லுறுதிதாரும்
கண்குளிர உனைக்காண கருனை செய்யும் - குரலை
காதாலே கேட்கஅதை திறந்தே விடும்.

உன் நாமம் சொல்ல நாவில் உறைந்து நில்லும் - அதை
ஓயாமல் சொல்லநல்ல கருவியாக்கும்
பண்ணோடு உனைப்பாடி மகிழவேண்டும் - அதற்கு
பக்கத்தே நீயிருந்து தாளம் போடும்.

உனையெழுத என்கரத்தைக் கருவியாக்கும் - உன்
பணிசெய்ய நடக்ககாலை பலப்படுத்தும்
உன் வசனம் என் நினைவில் அமர்வதற்கு - அதை
ஒப்பற்ற சிம்மா சனமாக்கும்.

சொல்லாலும் செயலாலும் சாட்சியாக - என்
சுந்தரனே உனக்காக வாழவேண்டும்.
பொல்லாத உலகத்தில் உன்னைவிட்டு - நான்
போகாமல் இருக்கவரம் தரவேவேண்டும்.

உலகத்தின் எல்லைவரை சென்று நாளும் - நான்
உன் நாமம் சொல்ல ரெண்டு சிறகைத் தாரும்.
பலனற்ற பாவமுள்ளோன் என்னை - உன்பேர்
பறைசாற்றும் பலவானாய் மாற்றிவிடும்.

பி. தமிழ்ச் செல்வன் மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மேம்பாட்டுக்கு வழியாகும் தன்னடக்கம்

வி. அனுஷா

ஒவ்வொரு மனிதனும் தனது சுயம் (Self) பற்றிய வளர்ச்சியில் தன்னை சுற்றியுள்ள எதார்த்தங்களின் தாக்கத்தினூடாக புதியபுதிய அணுகுமுறை வளர்ச்சியினைப் பெறுகின்றான். தன்மதிப்பு (Self-respect), தன்னம்பிகை (Self-Confidence), நற்சுதந்திரம் என்பவை போன்று தன்னடக்கம் (Self-Control) எனும் ஓர் அணுகுமுறை வளர்ச்சியினூடாக தான் வாழும் புற உலகின் பல்வேறு வரையறைகள், நடைமுறைகளை உள்வாங்கி அதற்கேற்ப தன் வாழ்க்கையைக் கொண்டு செல்ல முற்படுகிறான். தன்னடக்கம் என்பது மனிதனது நடத்தையுடன் தொடர்புடைய ஒரு உளவியல் செயற்பாடு. அதை நிர்ணயிக்கும் காரணிகளாக:-

★ தனிநபர் உருவாக்கம் (Socialization)

★ ஒவ்வொருவரதும் தனித்துவம் (Individualism)

★ மனப்பாங்கு (Attitude)

★ சமூக நியமங்கள், நெறிகள் (Social norms & ethics)

என்பன காணப்படுகின்றன. தன்னடக்கம் எப்பொழுதும் நடத்தை சார்ந்ததாக அமைந்த போதும் உணர்வு நிலைசார்ந்த வெளிப்பாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. குழந்தைத்தனமான மனித நடத்தையிலிருந்து விடுபட்டு ஒவ்வொரு மனிதனதும் உணர்வுக்குட்பட்ட ஆளுமை விருத்தியின் வெளிப்பாடாக இது புலப்படும். தன்னடக்கம் என்பதினூடாக ஒரு மனிதன் தன்னை ஒழுங்குபடுத்தவும் அவனூடாக ஒரு சமூகமே ஒழுங்குபடுத்தப்படவும் வாய்பான சந்தர்ப்பங்கள் உருவாகலாம். அத்துடன் ஒவ்வொரு மனிதனதும் சுயமேம்பாடு (Self development), அந்தஸ்து விருத்தி (Status development) என்பவற்றின் வளர்ச்சிக்குரிய முக்கிய காரணிகளுள் தன்னடக்கமும் ஒன்றாக விளங்குகின்றது.

'என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை' 'அந்தச் சந்தர்ப்பத்தில் என் உணர்வுகள் கட்டிற்குள் நிற்க மறுத்துவிட்டன' போன்ற பதங்களின் வெளிச்சத்தில் சுயகட்டுப்பாடுகள் மீறப்படுகின்ற சந்தப்பங்கள் உருவாகலாம். ஆனால் அவற்றின் செயல்நிலை விளைவுகள் (Consequences of action) ஒவ்வொரு மனிதனதும் சுயமதிப்பீட்டிற்கு களம் அமைத்துவிடும்.

தன்னடக்கம் எனும் நடத்தையின் ஆரம்பம் சுயஒழுங்கு (Self-discipline) என்பதிலிருந்து உருவாக்கப்பட வேண்டியது என்பதை கல்வியியலாளர்கள் வலியுறுத்துவர். இதை யாரும் மறுத்து விட முடியாது. எனவே சுயக்கட்டுப்பாடு என்பது சுய ஒழுங்கின் விளைவாக எழும் நன்னடத்தை என்றும் கூறலாம்,

ஒவ்வொரு மனிதனும் ஆரம்ப வளர்ச்சி நிலையில் தன்னைக் கட்டுப்படுத்தி வாழ்வது முடியாததாகின்றது. ஆனால் இளம் பருவ வளர்ச்சி நிலையிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தன் உணர்வுகளை மொத்தமாக அடக்கியாளப் பழகிக் கொள்கின்றான்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறன், மனநிலை சமூகமயமாக்கலினூடாக அவனுக்கு கற்பிக்கப்படுகின்றது. தேவையானவை, அவசியமற்றவை என பகுத்தறியும் திறன், காலத்தின் தேவை, சூழலை உய்த்துணரும் மனநிலை, திட்டமிட்டுச் செயற்படும் வாழ்க்கை முறைமை இவை அவனது தன்னடக்க நடத்தையில் எப்பொழுதும் சமநிலையை (Equilibrium) உருவாக்குகின்றன.

தன்னடக்கத்தின் நிலைத்த தன்மை என்பது இரண்டு காரணிகளின் இடைவினையினூடாக நடைபெறலாம்.

1. மனம் (Mind)

2. அறிவு (Knowledge)

பலர் தாம் மனவுறுதி அற்றவர்கள் என்பதை காரணம்காட்டி தாம் சுயகட்டுப்பாடற்று இருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயப்படுத்துவர். சிலர் தம் அறிவீனத்தைக் காரணம் காட்டி தன்னடக்கமின்மையை நியாயப்படுத்துவர். சாதாரணமாக சுயகட்டுப்பாடு மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பல நிகழ்வுகள் வெளிப்படும். சுயகட்டுப்பாட்டை மீறவேண்டிய சந்தர்ப்பங்களில் ஒருவன் தன்னைத்தானே கட்டுப்படுத்துகின்றான். வேறொருவன் அழிவுச் செயல்களில் ஈடுபடுகின்றான், இன்னொருவன் ஏதோ ஒன்றை புதிதாக ஆக்க முற்படுகின்றான். இந்த நடத்தை மாற்றங்கள் ஒவ்வொன்றும் அவனது அறிவு, மனம் என்பவற்றின் இடைவினையின் விளைவாகவே வெளிப்படுகின்றன. எனவே இவை இரண்டும் தன்னடக்க நடத்தையின் நிலைப்பிற்கு வழி வகுக்கின்றன எனலாம்.

தன்னடக்கத்தின் இன்னோர் மறை பொருளாக விளக்கப்படுவது உணர்வுகளை கட்டுப்படுத்துதல் ஆகும். உணர்வுகளை அடக்குதல் அல்லது உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல் மனிதனது மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். அல்லது தன்னடக்கம் மனிதனது சுதந்திரமான செயற்பாட்டிற்கு தடை விதிக்கலாம் என்ற கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் அவற்றிற்கு மாறாக மனிதனது உயர்வுக்கும், தாழ்விற்கும் வழிகாட்டியாக இத் தன்னடக்கம் என்பது அமைந்து விடுகின்றது. மனிதனது ஆளுமையின் குணப்பண்புகளை வலுவிழக்கச் செய்வதற்கு பதிலாக ஆழுமையின் குணப்பண்புகளை நெறிப்படுத்துவதாக இத்தன்னடக்கம் விளங்குகின்றது.

எனவே தன்னடக்கம் என்பது ஒவ்வொரு மனிதனதும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் நடத்தையாகும். மனித மேம்பாட்டுச் செயல் நிலையில் அனைவரும் உய்த்துணர வேண்டிய மனித நடத்தைகளில் ஒன்றாக தன்னடக்கம் விளங்குகின்றது. இயற்கையையும், உலக சக்திகளையும் அடக்கியாளும் போது தான் உலகை வென்ற, உணர்வை வென்ற மாமனிதனாக மாற முடியும்.

- நன்றி - 'நான்'




**இளவரசி ஆலிசின் மகள் "டிப்திரியா" என்னும் தொண்டை அழற்சி நோயால் புழுவாகத் துடித்தாள். இந்நோய் ஒரு பயங்கரத் தொற்று நோய். எக்காரணத்தை முன்னிட்டும் தன்மகளைக் கட்டிப்பிடிக்கவோ முத்தமிடவோ கூடாது என்று மருத்துவர் ஆலிசை எச்சரித்திருந் தார். ஆனால் ஆலிசின் மகள் மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டு "அம்மா, என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடும்மா" என்று கதறி அழுத போது ஆலிசு மருத்துவரின் எச்சரிக்கையையும் மீறி, தன் மகளைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள். அந் நோய் அந்நேரமே அவளைத் தொற்றிக் கொள்ள ஒரு சில நாள்களில் ஆலிசு இறந்தார்.**

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்!**

# மீட்பு யாருக்கு? - கருத்தரங்கு

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 20 முதல் 23 வரை நியூயோர்க்கில் உள்ள புனித ஜோசப் குருமடத்தில் வைத்து சர்வதேச மீட்புக் கருத்தரங்கம் நடைபெறுகிறது. வன்முறையாலும் போர்களாலும் சிதைவுண்டிருக்கின்ற இச் சூழலில் இயேசுவின் போதனைகளில் மீட்பு யாருக்கு கிட்டும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. கடவுளின் பெயரால் கடவுளுக்காக கொலை செய்கின்றனர். எனவே, மீட்பு யாருக்கு? இக் கருத்தரங்கு ஆழமாக சிந்திக்கவிருக்கின்றதென்று அறிவித்துள்ளார், இக் கருத்தரங்கத்தின் முக்கிய பேச்சாளரும் உரோமை கிரகோரியானா பல்கலைக் கழக இறையியல் பேராசிரியருமான அருள் திரு ஜெரால்ட் ஒக்கா லென்ஸ். உலகமெங்கும் இருந்து இறையியல் அறிஞர்கள் வருகை தருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



க.பொ.த (சாதாரணம்)

– கத்தோலிக்கம் –

❖ மெற்றில்டா

## 16ம் பாடம்

### இயேசுவே சுகமும் ஆறுதலும் அளிக்கிறார்.

* விசுவாசம், விசுவசிப்பவனைப் பாவத்திலிருந்து விடுவிக்கிறது. முற்றாகத் தூய்மைப்படுத்துகின்றது. ஆனபடியால், பாவ மன்னிப்புப் பெறும் விசுவாசி பூரண சுகத்தையும், அமைதியையும் பெறுவான். அதே போன்று சரீர, ஆன்ம சுகத்தை உலகிற்கு அளிப்பதற்கு முற்படுவான்.

* உலகின் பாவத்தின் காரணத்தால் நோய், அமைதியின்மை, பகை, அழிவு என்பன உருவாகுகின்றன. மாறாக, இறைவனில் விசுவாசம் கொள்பவன் அதன் மூலம் சுகத்தையும், அமைதியையும் காண்கின்றான். உலகத் தேவைகளை அவன் பெறுவதுடன் ஆன்ம வளர்ச்சியையும் பெறுவான்.

* இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து, பேய்களை எல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்,....... அனுப்பினார். லூக் 9: 1-2

* இயேசு சொன்னது, செய்தது போலவே அவருடைய சீடர்கள் சொன்னதும், செய்ததும் விசுவாசத்தின் காரணத்தினாலே ஆகும். இவர்களும் உலகுக்குச் சுகம், அமைதி, முன்னேற்றம், ஆகிய வற்றைப் பெற்றுக்கொடுத்தனர்.

**உதாரணங்கள்**

1) யாயீரின் மகள் குணமடைதல் - லுக்கா 8: 40 - 56
2) 10 தொழுநோயாளிகள் குணமடைதல் - லூக்கா 17: 11-19
3) பேய்பிடித்த ஒருவனைக் குணமாக்குதல் லூக்கா 9: 10-17

போன்ற இயேசுவின் புதுமைகளைக் கூறமுடியும்.

* சுகம், அமைதி, முன்னேற்றம் ஆகியவற்றைப் பெற இறைவனுள் வாழ வேண்டும்.

* புனித லூக்கா 9: 1-6

* வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ராயேல் மக்களிடமே செல்லுங்கள் .......... கொடையாகப் பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள். மத்தேயு 10: 6-8

* திருவருட்சாதனங்கள் வழியாக நாம் திருப்பணிக்கு அழைப்புப் பெற்றுள்ளோம். முதலில் அப்போஸ்தலர்கள் பெற்ற இந்த அழைப்பு, இன்று திருச்சபையில் திருவருட்சாதனங்கள், மறைபோதனை, மறை வகுப்புகள் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

* சகல திருவருட்சாதனங்கள் வழியாகவும் கிடைக்கும் இறை வல்லமையை நாம் விசுவாசத்தில் நிலைத்து வாழும் போது தான் நன்கறிய முடியும். இல்லையெனில் நம்மில் விசுவாசமில்லை என்பதே காரணம்.

* லூக்கா 12: 11-12

* கிறிஸ்தவர்களான நாம் உலக முடிவில் புதிய வானமும், புதிய பூமியும் (திருவெ ளிப்பாடு 21: 1-8) பற்றி விசுவசிக்கிறோம். எனவே, இறையரசை நோக்கிச் செல்லும் முடிவில்லாப் பயணத்தில் நாம் இணைந்து, அவ்வக் காலங்கட்கேற்பவும், நாடுகளின் நிலைக்கேற்பவும் எமது தூதுரைப் பணியை உற்சாகத்துடன் செய்ய வேண்டும்.

* எனவே, பரிசுத்த ஆவியாரின் துணையுடன் திருச்சபை எம்மைப் பல்வேறு வழிகளில் ஆற்றுப்படுத்துகிறது.

**உதாரணம்:**

1) கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிணைப்புப் பற்றிய வெளியீடுகள்.
2) பிற மதங்கள் பற்றிய வெளியீடுகள்.
3) பரிசுத்த திருச்சபையின் மறைபரப்புப் பற்றிய வெளியீடுகள்.

* இவ் வெளியீடுகள் மூலம் நாம் அனைவரையும் சகோதரர்களாக ஏற்று. உறவாடி மீட்பின் அடையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளமாக மாறவேண்டும் என்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் தூதுரைப்பணியாகும்.

17ம் பாடம்
நாம் பூமியின் உப்பாவோம்

* யாக்கோப்பு 2: 14 - 17

* இன்றைய சமுதாயத்தில் பேராசை,அதிகார மோகம், அனைத்தையும் அறியும் ஆவல், தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாகவும், ஆடம்பர வாழ்வாலும் நிறைவடையலாம் என நினைக்கிறான்.

* செயலுடன் கூடிய அன்பற்ற நம்பிக்கை உண்மையான நம்பிக்கையல்ல.

* செயல் வடிவம் பெறாத நம்பிக்கை உயிரற்ற நம்பிக்கை எனப் புனித யாக்கோபு கூறுகிறார்.

* சகல பிரச்சினைகளுக்கும் நம்பிக்கையூடாகத் தீர்வு காணமுடியும்.

* உண்மை வாழ்வு வாழ்வோமாயின் நாமும் கிறிஸ்துவின் உடன்படிக்கை வாழ்வில் இணைவோம். கிறிஸ்துவின் பாதையில் சென்று அவரருந்திய பாத்திரத்திலேயே நித்திய வாழ்வின் நீரைப் பருக வேண்டும். அப்போதுதான் நாம் உண்மைக் கிறிஸ்தவராகிறோம்.

## செபமாலை அன்னையின் திருவிழா

1571ம் ஆண்டு அக்டோபர் முதல் ஞாயிறன்று துருக்கியருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கடற்போரில் லெபாந்தோ (Lepanto) என்ற இடத்தில் கிறிஸ்தவர்கள் வெற்றி பெற்றனர். அதே நாளில் தான் உரோமை நகரில் செபமாலை அமைப்புகளெல்லாம் ஒன்று கூடி புனித மரியாளுக்குப் பெரிய ஊர்வலம் ஒன்றையும் முன் திட்டமிட்டு நடத்தியிருந்தனர். எனவே செபமாலை அமைப்புகளின் ஊர்வல நாளில் கிறிஸ்தவர்களுக்கு வெற்றி கிடைத்த காரணத்தால் அக்டோபர் மாதம் 7ம் திகதியன்று "செபமாலை அன்னையின் விழா" கொண்டாடும் பழக்கம் திருச்சபையில் ஏற்பட்டது.

## செபமாலை தோற்றம் பெற்றது எப்படி?

கி.பி. 10ம் நூற்றாண்டளவில் 150 விவிலியத் திருப்பாக்களை துறவியர் பாடி வந்த வழக்கம் இருந்தது. இப்பழக்கத்தைப் பின்பற்றிக் கிறிஸ்தவர்கள் 150 தடவை ஆண்டவர் கற்றுக்கொடுத்த செபத்தை செபித்து வந்தனர். காலப்போக்கிலே கி.பி 11ம் நூற்றாண்டிலே, மரியா பக்தி தோன்றி வளர்ந்து கொண்டிருந்த பின்னணியிலே 150 தடவை அருள் நிறைந்த மரியே என்ற செபத்தைச் செபித்தல் வழக்கிற்கு வந்தது. இதுவே மேலும் வளர்ச்சியுற்று 13ம் நூற்றாண்டளவில் இன்றைய செபமாலை வடிவம் பெற்றது.

* திருப்பலியில் அனைவரும் ஒன்றாகப் பந்தியில மர்கிறோம். ஒருவருக்கொருவர் சமாதானம் சொல்கிறோம். ஆனால், அன்றாட வாழ்வில் எதையும் காண முடியவில்லை. அன்றைய ஆதிக் கிறிஸ்தவரின் வாழ்க்கையை இன்றும் கடைப்பிடித்து நாம் வாழ வேண்டியது அவசியம்.

* லூக்கா 3:11

* நான் தாகமாயிருந்தேன், நான் பசியாயிருந்தேன். நான் ஆடையின்றியிருந்தேன் என்ற கிறிஸ்துவின் குரல் இன்றும் எம் சமுதாயத்தில் எழுகிறது. அதை உணர்ந்து அதற்குச் செவிமடுக்க வேண்டும்.

* இன்று உலகில் நீதியான சட்டங்களிருந்தாலும் அநீதி, முறையற்ற செயல்கள் ஆகியன மலிந்துள்ளன. இதற்கான காரணம், அன்பற்ற வாழ்வே.

* இறைவன் முழு அமைதியையே விரும்புகிறார். முழு அமைதியுள்ள இடத்தில் ஒற்றுமையின்மை, பகைமை, பழிவாங்கல், பொறாமை, பெருமை இருக்காது. அன்பு ஒன்றே இருக்கும்.

* இன்று இறையன்பு மக்களிடம் இல்லாததால் எம்மில் பலர் தம் உயிரையே மாய்க்கின்றனர்,சிலர் சமுாயத்தை வெறுக்கின்றனர். பலர் சிறைகளில் உள்ளனர்.

* நாம் எமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்த வேண்டும் இதைச் சமூகம், பொருளாதார, கலாச்சார வாழ்விலிருந்து பிரித்து நோக்காது, அவற்றினூடாகப் புனிதத்தை நாடி ஆன்மீகத்தை வளர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயத் தராசு

அருட்தந்தை N.C. அருள்வரதன்

* உண்மையைத் தேடிப் போனேன்
ஓரிடமும் காணவில்லை
என்னடா உலகமிது
என்றெனக்குள் எண்ணிக்கொண்டு
நீதிதான் எங்குமுண்டா
என்றுதேடப் புறப்பட்டேன்
பாவமெந்தன் நிலை எனக்குள்
பரிதாபப்பட்டுக் கொண்டேன்
நீதியைக் காணவில்லை
நினைப்பதற்கும் நியாயமில்லை.

* உக்கி உழுத்து விட்ட
உருக்குலைந்த மனிதரிடை
என்னதான் நிறைவு கண்டேன்
எதுவுமே இல்லை வாழ்வில்
பொய்யிலே புரட்டிப் புரட்டி
பொழுதெல்லாம் போக்குகின்ற
பொய்யான முகங்கள் கண்டு
புலம்புகின்ற உள்ளமுண்டாம்.

* புறங்கூறும் மனிதருக்காய்
புலம்புகின்ற இதயங்களுந்தான்
"அறம்" இல்லை அவர்கள் வாழ்வில்
அநியாயம் ஒன்றே மிச்சம்
எலும்பு இல்லை நாவுக்கு
எப்படியும் அது புரழும்
பொல்லாத மனித நாவில்
புதிதாக ஒன்றுமில்லை.

* வாலறுந்த பட்டங்கள்
வளர்ச்சி இல்லை அவைகளுக்கு
நூலறுந்த வாழ்விவைகள்
நொருங்கி விழும் கண்ணெதிரே
சீரழிந்த வாய்களிலே
சிறிதேனும் உண்மை இல்லை
பேரழிவே அவர்களுக்குப்
பெரும் பரிசாய்க் கிடைக்கும் பாரீர்
நேர் வழியில் நடந்து சென்றால்
நியாயமில்லைப் பயப்படவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புரவு

வேதாகமத்தின் மையக்கருவாக விளங்குவது ஒப்புரவாகும். இறைவன் தனது அன்புறவிலே மனிதனைப் படைத்து, அதிலே அவன் வாழ வேண்டும் என்று விரும்பினார். ஆனால், மனிதன் தனது கீழ்ப்படியாமையால் பாவம் செய்தான். (தொ.நூ 3:6) இதனால் உறவு முறிகின்றது. இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் இருக்கும் உறவு முறிந்தது போல் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள உறவும் முறிகின்றது. இதிலே, சகோதரனை சகோதரனே கொல்லும் நிலை காணப்படுகின்றது. (தொ. நூ 4:8) முறிந்து போன இந்த உறவுகளை சீர்செய்வதற்கான திட்டத்தையும், அதனை நடைமுறைப்படுத்துவதையும் வேதாகமத்திலே காணலாம். இதுவே 'ஒப்புரவு' எனப்படுகின்றது. இந்த ஒப்புரவுப் பணியை செய்வதற்கு இறைவன் தனது மகனையே அனுப்புவதாகக் கூறுகின்றார்.

ஒப்புரவுப் பணியை நடைமுறைப்படுத்துவதற்காக இறைவன் காலத்துக்குக் காலம் தீர்க்கதரிசிகளை அனுப்புவதைக் காண முடிகின்றது. இவர்கள் அனைவரும் ஒரே செய்தியையே கூறினர். "இறைவன்-தந்தை என்றும், மனிதர்கள் - அவரது பிள்ளைகள்" என்றும் கூறினர். இதனால், இந்த அன்புறவு நிலை நாட்டப்பட வேண்டும் என்பது இவர்களது செய்தியாகக் காணப்படுகிறது. மேலும், மனிதனது கீழ்ப்படியாமையால் ஏற்பட்ட உறவு முறிவை ஒப்புரவு செய்வதற்காக இறைவன் அவர்களை மன்னிக்கிறார். இதனால், மனிதனது பாவங்கள் இறைவனது மன்னிப்பால் போக்கப்படுகிறது. "ஆண்டவர் இரக்கம், பரிவு உள்ளவர். சினம் கொள்ளத் தயங்குபவர். பேரன்பு மிக்கவர் ...." (வி.ப 34: 6-7) என்று கூறப்படுகிறது.

ஒப்புரவுக்காக புதியதொரு உடன்படிக்கையை இறைவன் ஏற்படுத்தினார். இதனால், சமுதாயுத்தில், இயற்கையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை அழித்தார். நீதி, நேர்மை எல்லோருக்கும் சமம் என்கிறார். எவன் தனது குற்றங்கள், பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்கிறானோ அவனது பாவங்கள் மன்னிக்கப்படும் எனப்படுகிறது. இதை (தி.பா 38, 51, 85) ம் அதிகாரங்களில் காண முடிகிறது.

வேதாகமத்திலே ஒப்புரவு நாயகனாக கிறிஸ்து சித்தரிக்கப்படுகிறார். இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஒப்புரவை ஏற்படுத்தவே யேசு வந்தார், இது அவரது வாழ்வு, போதனைகளில் தெளிவாகிறது. ஒப்புரவு சாதனங்களாக யேசுவின் பாடுகள், மரணம் என்பன காணப்படுகின்றன. ஒப்புரவு ஏற்படுவதற்கு மனமாற்றம் அவசியமாகின்றது. இதனால் தான், யேசுவினது போதனைகள் பாவிகளது மனதில் மனமாற்றத்தை ஏற்படுத்தியது. "மனந் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு 1:5) என்பதன் மூலம் மனந்திரும்புதலுக்கான அழைப்பை காண முடிகிறது. அதே போல், மனம் மாறா விட்டால் மன்னிப்புக் கிடையாது என்பதை, "மனம் மாறா விட்டால் நீங்கள் அனைவரும் அழிவீர்கள்" (லூாக் 13: 15) என்பதன் மூலம் காணலாம். இவ்வாறு ஒப்புரவுக்கு மனமாற்றம் அவசியம் என்பதை வேதாகமத்தில் காணக் கூடியதாக உள்ளது.

கிறிஸ்து மரித்ததன் மூலம் மனிதனுக்கும், கடவுளுக்குமிடையில் ஒப்புரவு நடந்து விட்டது என உரோ 5: 10,11 இல் கூறப்படுகிறது. "அவருடைய மகன் நமக்காக தம் உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு நாம் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்" எனக் கூறப்பட்டுள்ளது. கடவுள்தான் ஒப்பரவுப் பணியை யேசுவுக்கு கொடுத்தார். அதே போல், அப் பணியை எமக்கும் தந்துள்ளார். "அவரே கிறிஸ்துவின் வழியாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கியவர். அவ் ஒப்புரவுப் பணியை எமக்கும் தந்துள்ளார்" என 2கொரி 5:18 21 இல் கூறப்பட்டுள்ளது.



ஒப்புரவினால் என்ன நடந்திருக்கிறது என்பதை நோக்க வேண்டியது அவசியமாகின்றது. இதை கொலோ 1: 20 - 22 இல் காணலாம். அதாவது, ஆரம்பத்தில் கடவுளது விரோதிகளாகக் காணப்பட்டவர்கள், கிறிஸ்து ஊனுடலெடுத்து, ரத்தம் சிந்தியதால் கடவுளது அன்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புரவாக்கப்பட்டுள்ளனர் எனப்படுகிறது. ஒப்புரவினால் மனிதன் இறைவனுக்கு ஏற்புடையவனானான். மனிதனுக்கும், இறைவனுக்கும் அன்பு அதிகரித்தது. ஒப்புரவினூடாக அன்பு மனித உள்ளங்களில் உருவாகின்றது.

இவ்வாறு, "ஒப்புரவு" என்னும் எண்ணக் கருவானது, வேதாகமத்தின் மையக்கருவாகவும், இறைதந்தையோடு எம்மை இணைத்து, "அவரது பிள்ளைகள் நாம்" என்ற உயர் அந்தஸ்த்தை ஏற்படுத்தித் தந்த உன்னத சாதனமாகவும் கிறிஸ்தவத்திலே சிறப்பிடம் பெறுகிறது. அதிலும், ஒப்புரவின் மூலம் கடவுளோடு எம்மை இணைக்கும் பாலமாக இருப்பவர் " கிறிஸ்து" என்பது. மேலும் சிறப்புக்குரியதாகக் காணப்படுகிறது.

*அ. சுதர்சினிசெல்லீன்*

**- கோட்டைக் கல்லாறு -**

## திருத் தந்தையும் யூதத் தலைவரும் சந்திப்பு

**கத்தோலிக்க திருச்சபையும் யூதசபையும் உலக அமைதிக்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை. உரோமை யூதர்களின் தலைமைக் குருவான ராபி டாக்டர் றிக்கார்டோ இமார்க் கடந்த பெப்ரவரி 13ம் திகதி வியாழன் திருத்தந்தையை வத்திக்கானில் சந்தித்தார். உரோமையில் கத்தோலிக்கர்களும் யூதர்களும் இணக்கமுடன் வாழ்வது குறித்து தனது மகிழ்ச்சியை வெளியிட்ட திருத்தந்தை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பரஸ்பரம் புரிந்து கொள்ளாமையும் அவநம்பிக்கையும் இருந்தாலும், அமைதிக்காக நாம் கூமிழைத்து உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் பாலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினைகள் குறித்தும் பேசப்பட்டது. இந்தச் சந்திப்பு கத்தோலிக்கரிடையிலும் யூதர்களிடையிலும் நல்லிணக்கத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.**

# இலக்கங்கள் வெளியிடும் உண்மை

★ யாழ்ப்பாணத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பிடமற்ற குடும்பங்கள் 24.178

அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இராணுவ வசமாகியுள்ள நிலம் - 12,259 ஏக்கர்

★ கட்டு நாயக்கா விமான நிலைய அகலப்படுத்தலுக்காக 4338 குடும்பங்கள் அப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட உள்ளனர். தொழிற்சாலைகள் 15 மூடப்பட உள்ளன.

★ 2002ம் ஆண்டில் தொழிலற்றவர்கள் 7%
2001ல் தொழிலற்றவர்கள் 7.7%
2002ல் தொழிலற்றவர்கள் 9.8%
2001 டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து 2001 ஒக்டோபர் 31ம் திகதி வரை மூடப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிகை 23. தொழிலிழந்த தொழிலாளர்கள் 13,000 பேர்.

★ பெருந்தோட்டத்துறைத் தொழிலாளரில் 83% மானோர் ரூபா 2000 ற்கும் குறைவாகவே மாத வருமானம் பெறுகின்றனர். அவர்களில் ஆகக் குறைந்த சத்தையும் பெற முடியாது 43% மானோர் உள்ளனர். ஒருவருக்குத் தேவையான கலோரி அளவில் ஆகக் குறைந்த அளவையும் பெற்றுக் கொள்ள முடியாது 79% மானோர் உள்ளனர். பிறக்கும் முன்பே சத்துக் குறைபாட்டுக்கு 10% மானோர் உள்ளாகின்றனர். நிறை குறைந்த பிள்ளைகள் 10%. பிரஜா உரிமை அற்றோர் 1.60, 000 பேர்.

நன்றி - '**ஒளியைநோக்கி**'

**பேர், அபிவிருத்தி, வெளிநாட்டு முதலீடு என்ற பெயரால் இந்நாட்டு மக்களின் நிலம், தொழில், வாழ்விடம், ஆரோக்கியம் அனைத்துமே சூறையாடப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய மனிதன்

இயேசு உள்ளங்களையும் அதன் உள்ள டக்கங்களையும் மட்டுமே கவனிப்பவர். எளிமையையும் தாழ்ச்சியையும் நேசிக்கிறவர். உண்மையைப் பேசிய வர். நன்மையைச் செய்தவர். கடவுள் மகனாக அவர் இருந்தும் முதன்மை நிலையைத் தேடியதில்லை. மனி தனாக வாழ விரும்பும் உள்ளங்கள் மாற்றம் காண விரும்பினால் அதை உடனே தந்து அருள்பவர்.

உயர்ந்தவராகத் தம்மை எண்ணுபவர்க்கு அந்த எண்ணத்திலிருந்து இறங்கிவர வேண்டும் என்று காட்டித் தருபவர் யேசு.

சக்கேயு ஒரு ஆயக்காரன். அவனது உரோமானிய எஜமானர்க்கு அவன் விசுவாசமுள்ள சேவகன்...... கணக்காக வரி வசூலிக்கும் கெட்டிக்காரன். அடிமைப் பட்டிருந்த யூதருக்கோ அவன் பாவி, தள்ளிவைக்க ப்பட வேண்டியவன்.

தம் அடிமை நிலையை எண்ணி வெதும்பிய யூதருக்கோ வரி செலுத்துவது கசப்பான செயலாக இருந்தது. அதைச் செய்தவன் துரோகியாகத் தென் பட்டான். தன் தொழில் எதுவாக இருப்பினும் சக்கேயு தன் ஆன்ம தாகத்தை இழக்கவில்லை. அது நீதியை, இரட்சிப்பைத் தேடிக் கொண்டேயிருந்தது. அதனால் தான் யேசு வீதி வழியே வருகிறார் எனக் கேள்விப்பட்டதும். அவரைப் பற்றி ஏலவே அறிந்திருந்த அவன், ஓடோடிச் சென்று அவரைக் காண முயல்கின்றான். அவனது உயரம் அவனுக்குத் தடை போடுகிறது.... இருப்பினும் தனக்குள் இருக்கும் வேகம் காரணமாக அந்தத் தடையை வென்றுவிட தீர்மானித்துவிட்டான். அருகிலிருந்த அத்தி மரம் கண்ணில்பட்டது. யேசுவைக் கண்டுவிடும் அவாவில் கிடுகிடென்று மரம் மீது தாவி ஏறிவிட்டான். தன் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதில் அவனுக்கு அத்தனை பற்று.

முக்காலமும் உணர்ந்தவரான யேசு மரத்தடி யில் வந்த போது அவனைப் பார்க்கிறார். அவனது உள்ளத்துக்குள் புதைந்திருக்கும் ஆசையை.... இரட்சிப் பின் தாகத்தைப் புரிந்து கொள்கிறார். பாவிகளைத் தேடி வந்த தேவனாக தான் இருப்பதால் கிடைத்து விட்ட வாய்ப்பை அவர் இழக்கவில்லை. அருமையான வார்த்தைகளை உதிர்க்கிறார். "சக்கேயுவே இறங்கி வா... இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்" சக்கேயுவே எதிர்பார்க்காத வார்த்தைகள்! ஆச்சரியப்பட்டுப் போனான். தன் பெயர் கூட அவருக்குத் தெரிந்திருக்கிறதே. தயாராக இருந்தவன் இறங்கினான். ஆம் தன் நிலையினின்றும் இறங்கி வர... தனது வாழ்வினின்றும் இறங்கி வர விரும்பிக் கிடந்த அவன் அழைப்புக் கிடைத்ததும் விடு வானா? இறங்கி விட்டான்.

இறைவனுக்கு எப்போதும் எளிமையான உள்ளங்களே பிடிக்கும்.. பணம் - பதவி - அந்தஸ்து - கௌரவம் - படிப்பு - குலம் - கோத்திரம் என்ற ரீதியில் தம்மை உயர்வாக வைத்து எண்ணி அதிலே குளிர்காயும் மனித உள்ளங்களை விட அன்பு என்ற ஒன்றைத் தமது சொத்தாகக் கொண்டு வாழும் மனித உள்ளங்கள் மீது அவருக்குப் பிரியம் அதிகம். அவ்வாறான எளிமையான உள்ளங் களைத் தேடிச் சென்று வாசம் செய்வதுதான் இறைவ னுக்குப் பிரியமானது.



எனவே தான் தன் மீட்பைத் தேடும் ஆசையுடன் இருந்த சக்கேயு தனது உரோமை ஊழியன் என்கிற பெருமை, அந்தஸ்து - கௌரவம் தனது பணப் பெருமை என்கிற ஒரு மேலான உணர்வுடன் இருக் கும் வரை எளிமையை - பணிவை - அன்பை நாடும் இறைவனுக்குப் பொருத்தமில்லா உள்ளத்தையே கொண்டிருப்பான். உணர்வுகளிலிருந்து இறங்கி வர யேசு பணிக்கின்றார். ஏனெனில் அப்போது தான் அவரால் அவன் இல்லத்தில் - உள்ளத்தில் தங்க முடியும்.

உண்மையைப் புரிந்து கொண்ட சக்கேயு தாமதிக்க வில்லை. கிடைத்தற்கரிய வாய்ப்பு.. (ஒரு பொக்கிஷம்) தனக்கு கிடைத்து விட்டது. அதைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையுடன் தன் நிலை யை விட்டு அந்தக் கணமே இறங்கிவிட்டான். அன்று முதல் அவன் வீட்டுக்கே விமோசனம் உண்டாயிற்று. இதனால் தனக்குக் கிடைத்த நன்மைகளை எண்ணி அதைத் தந்த இறைவனுக்குக் காணிக்கை செலுத்துமாப் போல், இதுவரை தன்னால் பாதிக்கப்பட்டவர் யாரயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பினும் அவர்களுக்கெல்லாம் தான் பிரதியுபகாரம் செய்யத் தயார் என்கின்றான்.

தன் நிலை உணர்ந்தவன் .. .. தனக்குள் ஒரு மாற்றத்தை விரும்பியிருந்தவன் .. .. மீட்பைத் தேடித்திரிந்தவன்.. தனக்குரிய அழைப்பைக் கேட்டதும் அதை அடையாளம் கண்டு கொண்டவன். தன்னை.. தான் பெரியவன் என்கிற உணர்வுகளைத் துறந்தான்.. ..

வாழ்விற்கு நல்ல அர்த்தம் வரவேண்டுமானால்.. நம் உள்ளத்தில் மாற்றம் வரவேண்டும்.. பண்பில் எளிமையும், உள்ளத்தில் நேர்மையும்.. சிந்தனையில் தெளிவையும், நோக்கத்தில் உறுதியையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

மீட்புக்கான தேடல் நமக்குள்ளே உயிர்ப்புடன் இருந்து வரவேண்டும்.. அந்தத் தேடலின் போது கிடைக்கின்ற விளைவை நமக்குள்ளே தக்க வைத்துக் கொள்ள வேண்டும். நமது சொல்லுக்கும் சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் நிறையத் தொடர்புகள் இருக்க வேண்டும். அதில் எளிமையும், உண்மையும், நேர்மையும், கலந்திருக்கவேண்டும். அப்போது தான் நமது உள்ளம் இறைவனுக்குரிய தங்குமில்லமாக மாறும்.. இறைவனும் மகிழ்வோடு நம்மை நாடிவரத் தயங்கமாட்டார்.

- ஆனந்த A.G. ராஜேந்தரம் -

## பொது அறிவு

1) உலகிலே பெண் எழுத்தாளர் அதிகமாக உள்ள நாடு
 - ரஷ்யா

2) இலங்கையில் ஆதி மனிதன் வாழ்ந்த கற்குகைகள் உள்ள இடங்கள்
 - குருவிற்ற, பலாங்கொட, மஹியங்கன

3) உலகிலே உள்ள தாவரங்களின் வகை
 - இரண்டரை இலட்சம்

4) சின்னஞ்சிறு இதயத்தைக் கொண்ட மிருகம்
 - சிங்கம்

5) ஜனநாயகத்தின் தாய் நாடென அழைக்கப்படுவது
 - ஐக்கிய இராச்சியம்

6) உலகில் இரண்டு கண்டங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் நகரம்
 - இஸ்தான்புல் (துருக்கி)

7) உலகில் பொற்கோவில் நகரம் எனக் கூறப்படுவது
 - அமிர்தசரஸ் (இந்தியா)

8) வெப்ப நிலையை அளக்கப் பயன்படும் கருவி
 - வெப்பமானி

9) இலங்கையின் தேசிய விளையாட்டு
 - எல்லே

10) தாவர வளர்ச்சிக்கு ஏற்ற மண்
 - இருவாட்டி மண்.



தொகுப்பு:

இ. தினேஷ்
ஆண்டு 6e
மட்/ புனித மிக்கேல் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகத்துக்கு மரணம்...?

எமது தாகத்தைத் தணிக்க எத்தனை விதமான பானங்கள் இன்று அடுக்கடுக்காக காட்சிப்படுத்தப்படுகின்றன. உண்மையிலேயே இவற்றின் நிறமும் அழகும் பெயர்களும் எம்மைக் கவரத்தான் செய்கின்றன. அத்துடன் தடையற்ற பாதையூடாக இவை பரவும் வேகமும் அதிகமாதலால் இவற்றைப் பருகுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவின் பிரதான நிறுவனங்களுள் கொக்கோக்கோலா, பெப்சி ஆகிய இரு நிறுவனங்கள் முக்கியமானவையாகும். இவையிரண்டும் ஏட்டிக்குப் போட்டியாக தமது மென்பானங்களைத் தயாரித்து வருகின்றன. இவைகள் இலாபம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு தமது உற்பத்திகளை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றன.

இப்பானங்களில் விட்டமின்களோ, உயிர்ச்சத்துக்களோ இல்லை. அதிக சீனியும் சில அசிட் வகைகளும் நீண்ட காலம் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களும் நிறங்களும் மட்டுமல்ல, சாதாரணமாக வைத்தியர்கள் விழுங்வே வேண்டாம் என எச்சரிக்கும் காபன்டையொக்சைட்டை நுரை வடிவில் எமக்குத் தரப்படுகின்றது.

பல்வேறு நிறங்களில், பல்வேறு வடிவங்களில் சிந்தை கவரும் விளம்பரங்கள் மூலம் உலகம் முழுவதும் விற்கப்படுவது தாகம் தீர்க்கும் பானமல்ல. நச்சுப் பானங்களே. இதனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கான வருவாயும் ஏழை எங்களுக்கு கொடிய நோய்களுமே சொந்தமாகின்றன.

விளம்பரங்களினாலும் கவர்ச்சிகளாலும் ஈர்க்கப்பட்டு ஏதோ தாகத்திற்குக் குடித்தால் சரி என்று பருகும் பானத்தினாலேயே மனித சாரம் உறிஞ்சப்படுவது என்பது எம்மைப் போன்ற வறுமைக் கோட்டுக்குள் வாழும் ஆசிய நாடுகளுக்குத் தெரியாது. வியர்வை சிந்தி உழைக்கும் பணத்தை கொக்கோக்கோலா, பெப்சி முதலாளிகளுக்கு கொடுத்து நோயையும் பெற்றுக் கொள்கிறோம்.

சிறுநீரக பாதிப்புக் காரணமாக இளந் தாயொருவர் இறக்க நேரிட்டது. இவரது நோயின் காரணத்தை ஆராய்ந்த போது அவர் மதிய உணவின் போது தினமும் ஒரு கிளாஸ் குளிர்பானம் அருந்தி வந்தமையே இந் நோய்க்கான காரணம் என்று வைத்தியர்கள் கூறினர்.

அதிகமாக கொக்கோக்கோலா பருகுவது யார் என்பதை அறிவதற்காக இந்தியாவின் புதுடில்லி பல்கலைக்கழகத்தில் ஒரு போட்டி நடாத்தப்பட்டது. அனைவரும் வியக்கும்படி 8 போத்தல் கொக்கோக் கோலாவை குடித்த ஒருவர் அந்த இடத்திலேயே இறந்தார். இரத்தத்தில் காபனிரொக்சைட் அதிகரித்து, ஒக்சிஜன் அதிகம் குறைந்ததே இவரது மரணத்துக்கான காரணம் என அறியப்பட்டது. அன்றிலிருந்து பல்கலைக்கழகச் சிற்றுண்டிச்சாலையில் எல்லாவகையான குளிர்பான விற்பனையும் தடை செய்யப்பட்டது.

மலசல கூடத்தில் இதனை ஊற்றி ஒரு மணித்தியாலத்தின் பின் கழுவினால் கறைகள் அகன்று விடும். கறைகளை அகற்றக் கூடிய காரம்மிக்க அசிட் தன்மை உண்டு.

* உங்கள் ஆடைகளில், வாகனங்களில் படிந்த கிறீஸ் கறையை அகற்ற கொக்கோக்கோலா உபயோகியுங்கள்.

* இரும்புக்கறை மற்றும் ஏனைய கறைகளை அகற்ற அலுமினியக் கடதாசியை இப் பானத்தில் அமிழ்த்தி வைத்து உபயோகித்துப் பாருங்கள்.

* திருகிக் கழற்ற முடியாமல் உள்ளவற்றுக்கு துணித்துண்டை கொக்கோக்கோலாவில் நனைத்து, அந்த இடத்தில் சுற்றி விடுங்கள். சிறிது நேரத்தின் பின்னர் சுற்றிய துணித்துண்டை எடுத்துவிட்டு திருகிப் பாருங்கள்.

* வாகனங்களின் கண்ணாடியைச் சுத்தமாக்க கொக்கோக்கோலாவை உபயோகித்ததுப் பாருங்கள். பளிச்சிடும் தன்மையைக் காண்பீர்கள்.

* ஒருவர் தம்முடைய உடைந்த பல்லை பெப்சிக் கோலாவில் போட்டு வைத்தார். சில நாட்களின் பின்னர் தனது பல்லைக் காணவில்லையாம். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து விட்டது. மனிதன் இறந்து அடக்கம் பண்ண ப்பட்டு பல வருடங்களானாலும் சிதையாத பல்லை இல்லாமல் செய்யக்கூடிய அசிட்தன்மை இவற்றுக் குண்டு.

* இப்பானங்களைக் குடிப்பதால் எமது உடம்பின் எலும்புகள் கரைகின்றன. பற்கள் சிதைகின்றன. சிறுநீரகம் பாதிப்படைகிறது. உணவு ஜீரணிப்பதைக் குறைக்கிறது. உணவு ஜீரணிக்காமல் வயிற்றில் இருப்பதால் நச்சுத்தன்மைகள் உண்டாகி இரத்த த்தோடு கலப்பதால் பல்வேறு நோய்கள் உண்டா கின்றன.

மேற்படி மனித உயிர்களைக் காவுகொள் ளும்,அழிக்கும் கொக்கோக்கோலா, பெப்சி போன்ற பானங்கள் பற்றிய ஆய்வை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' என்ற அமைப்பு மேற்கொண் டது. இவ் ஆய்வு பற்றிய தகவல்கள் 'சந்தேசிய' என்னும் பத்திரிகை சிங்களத்தில் மொழிமாற்றம் செய்தது. மேலும் இவைபற்றிய தகவல்களை கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஒளியை நோக்கி' என்னும் பத்திரிக்கையும் அண்மையில் வெளியிட்டது.

ஆங்கில பத்திரிகை ஒன்று உலக இயற்கை அதிசயங்களுள் ஒன்றான இமய மலையிலேயே இக் கம்பனிகள் தமது கைவரிசையைக் காட்டிய தகவல் தனைக் கூறுகிறது. இதன் படி சூழலியல் மலைப்பகுதி யான இமாலய மலைத்தொடர்களில் கொக்கோக்கோலா, பெப்சி ஆகிய இரு பிரதான, பெரிய கம்பனிகளும் இவை போன்ற ஏனைய 10 கம்பனிகளும் எவ்வித அனுமதியு மின்றி தமது கம்பனி விளம்பரங்களுக்காக இம் மலை த்தொடரில் தாம் சார்ந்த படங்களை வரைந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் வணிக நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாக மாறி வருவதையே இது காட்டி நிற்கிறது.

பொருளாதாரத் தடை நிலவிய காலங்களில் உள்ளூர் உற்பத்தி, சுயதொழில் முயற்சிகளில் 'தெளி வான' இலக்குடன் ஈடுபட்ட நாம், இன்று தாகத்துக்கு நஞ்சை அருந்துவதோடு சுரண்டல் நிறுவனங்களுக்கு முதுகு சொறியவும் தொடங்கிவிட்டோம். மட்டக்களப் பிலிருந்து உள்ளூர் வளங்களின் பயன்பாடு, நுகர்வு என்பவற்றை பயன்படுத்தி வெளியாகும் 'மூன்றாவது கண்' ஆசிரியர் தலையங்கத்தில் இடம் பெற்ற விடயத் தை இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமானது.

போத்தலில் குடிநீர் வாங்கிக் குடிக்கும் காலம் வந்து விட்டது.
சிலிண்டரில் காற்றை வாங்கிச் சுவாசிக்கும் காலம் வரவேண்டாம்.

தேசியும் தோடையும் குளிர்சியான பழவகைகளும் எம் மண்ணில் விளைந்து நின்று தாகம் தீர்த்ததை 'சமாதானச் சூழலில்' மறக்காது இருப்போம்.

## வெறியாட்டம், பானம், வருமானம்

* கொக்கோக்கோலாவால் 2000 ஆண்டில் முதல் 4 மாத இலாபம் 5000 கோடி ரூபாய்.

* பெப்சியின் சொத்து மதிப்பீடு ஒரு இலட்சம் கோடி ரூபா.

* உலக குளிர்பானச் சந்தையில் 46 வீதத்தை கொக்கோக்கோலாவும் 21 வீதத்தை பெப்சி யும் இடம் பிடித்துள்ளன.

* அமெரிக்க கொக்கோக்கோலா நிறுவனங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இதற்கு குண்டர்படையும் அமெரிக்க இராணு வத்தினரும் உதவி வருகின்றனர் என்ற தக வல்கள் அண்மையில் வெளிவரத் தொடங் கியுள்ளன.

* இலங்கையில் இவ் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் முன்னறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கப்படல். நிவாரணம் மறுக்கப்படல், நலன்கள் மறுக்கப்படல் போன்றவற்றை எதிர் கொள்கின்றனர். தொழி லாளர்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும் பெரும் இலாபமீட்டி நிற்கும் கொக்கோக் கோலா பானத்தில் தொழிற்சங்கத் தலைவர் களின் இரத்தமும் கலந்து இருக்கிறது. அதையே நாங்கள் அருந்தியும் வருகிறோம்.


- நன்றி -

"ஆத்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்வதை



அன்னை தந்தை அன்பை நாங்கள்
அறிய மாட்டோமே – அவர்கள்
அரவணைப்பில் நாம் வளர்ந்து
தெரிய மாட்டோமே!
சின்னஞ் சிறிய பாலர் நாங்கள்
சிறைப்பட்டுள்ளோமே – எங்கள்
சீரிழந்து சீமான் கையில்
விலைப்பட்டுள்ளோமே,

ஆலை வேலை வாங்கி யெம்மை
அடித்து முறிக்கிறார் – பசிக்கு
அன்னந் தண்ணி தந்திடாமல்
வாட்டி வதைக்கிறார்
மாலை வேளை தூங்கினாற் தீச்
சூடு வைக்கிறார் – களைப்பால்
மண்டியிட்டுக் குந்தினால் – வெந்
நீரைக் கொட்டுறார்

வெட்கமின்றி வேசம் மிஞ்சி
வம்பு செய்திறார் – எம்மில்
வேட்கை கொண்டு வீணர் காம
வேட்டையாடுறார்.
இட்டமின்றி எம்மையீர்த்து
இம்சை செய்யிறார் – நாளும்
இன்னல் தந்து ஈனர் மோகத்
தாகம் தீர்க்கிறார்.

வேறு:

சிறியரெம் வாழ்வு வேண்டிச் சிந்தனையுள்ளோர் கூடி
உரிய தாம் வழியை யோர்ந்து உண்மையின் முயன்று மேலும்
கரியதாம் உள்ளங்கொண்ட கயவரைக் கடிந்து தள்ளி
கருணையில் சிறை யாம் மீழக் காத்திரமாவீர் ஐயா

கே. ஜே. வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனமாட நீங்கள் தயாரா?



R. தேவகுமாரி
பாலையூற்று

மனிதனுடைய அன்றாட வாழ்வில் அவன் சுகதேகியாக சுறுசுறுப்புடன் இயங்க உடற்பயிற்சி அவசியமென்று அறிந்திருக்கின்றோம். ஆனால் வெறு மனே உடலசைப்பதும், நடப்பதும், ஓடுவதும், உடற் பயிற்சி இயந்திரங்கள் மூலம் உடலை வளைப்பதும் மட்டுமே உடற்பயிற்சியென்று நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மேற் குறிப்பிட்ட உடற் பயிற்சிகளை விட, அதிகமான உடல், உள பரி பூரண சுகத்தைத் தரக்கூடிய எளிமையான உடற்பயிற்சி எது தெரியுமா?

**"நடனம்"**

அது சர்வதேச ரீதியல் ஒவ்வொரு மக்களா லும் கையாளப்படும் கலை, சந்தோஷத்தின் வெளிப் பாடு. அபிவிருத்தியடைந்த நாடாக இருக்கலாம், அபிவிருத்தியடையாத நாடாக இருக்கலாம். எதுவாக இருப்பினும் ஒவ்வொரு மனிதனினதும் கலாச்சாரத் திற்கேற்ப தொன்று தொட்டு தொடர்ந்து வரும் கலை வடிவமே நடனம். நடனம் ஆடுவதால் எம் உடல் பல பயன்களை அடைவது மட்டுமல்லாமல், உளரீதியாக வும் பல மாற்றங்களையும், பரவசத்தையும் ஏற்படுத் துகிறது. உதாரணமாக ஒரு சிறுவனை உடற் பயிற்சி செய்யுமாறு பணித்தால் அவன் விரும்பியோ விரும் பாமலோ கடமைக்காக அதைச் செய்து முடிக்கின்றான். அந்த வகையில் உடல் ரீதியாகத்தான் அவனுக்குப் பயன்கிடைக்கிறது. ஆனால் ஒரு சிறுவனையோ, வயது வந்தவரையோ நடனமாட வாருங்கள் என அழைக்க முன்பே இசைத்தட்டில் ஒலித்துக் கொண்டிருக்கும் பாடல், இசை, ஆரவாரம் போன்றவை இயல்பாகவே அவர் கை, காலை உசுப்பிவிடும். இசையைக் கேட்டுக் கொண்டே ஆடும் போது செவிப்புலன் இயங்குகிறது. இதயத்தில் புதியதொரு பரவசம் ஏற்படுகின்றது. உட லின் சகல பாகங்களும் பொறுப்பின்றி, வெறுப்பின்றி தாமாகவே அசைகிறது. நடனமாடும் போது அதிகம் வியர்ப்பதால் உடலினுள் உள்ள நோய்க் கிருமிகள் வெளியேற்றப்படுகின்றன. மற்றும் இரத்த ஓட்டம் சீராக்கப்படுவதால் உடலின் இறந்த கலங்களெல்லாம் புதிதாக்கப்படுகிறது. இளமை, அழகு, உடல் கட்டு என்பவற்றை பேணிக்காக்கவும் நடனம் இன்றியமையாத ஒன்றாகும். சிலர் தங்கள் குடும்ப சகிதமோ அல்லது வயது வித்தியாசமுடையவரோடோ சமமாக ஆடுவதை விரும்பமாட்டார்கள். வெட்கமும், கலாச்சாரமும் அவர்க ளுக்குத் தடையை ஏற்படுத்திவிடும். நடனத்தை வெறுப்ப தற்கோ வெட்கப்படுவதற்கோ அது ஒன்றும் அசிங்க மான கலையல்ல! உள அசுத்தத்தோடு நடனத்தைக் கொச்சைப்படுத்துவது அவரவர் குற்றம். நாங்கள் ஆடும் நடனம் மேற்கத்திய நடனமாகவோ, கீழைத் தேய உல்லாச நடனமாகவோ (பைலா) மட்டும் தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. எங்கள் பெண் பிள்ளைகளை கலாசாரம் குன்றாமல் பரத நாட்டி யம், கதகளி, மணிப்புரி, குச்சிப்புடி போன்றவற்றை யும், ஆணாக இருப்பின் அவரவர் விருப்பத்திற்கேற் பவும் பயிற்று விக்கலாம்.

குடும்பத்தின் அன்னியோன்னியம். மகிழ்ச்சி போன்றவற்றை நடனம் மேலும் விரிவாக்குகிறது. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்று சொல்வதற்கேற்ப ஒரு குடும்பத்தின் ஒன்று கூடலின்போது, ஆடல், பாடல் என்ற ஒன்றிருந்தால் அம் மகிழ்ச்சிக்கு எவ் இன்பமும் நிகரில்லை.! நன்னாள் பெருநாளில் குடும்பத்தார் கூடியிருக்க, மழலைகள் களங்கமற்ற உணர்வின் மூலம் நடனத்தை வெளிக்காட்டிவிடுவர். அந்த வேளையில் தாத்தாமாரும், பாட்டிமாரும் பொக்கைவாய் திறந்து கைதட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதைக் காணக் கூடியதாயிருக்கும். பிள்ளைகளை சிறுவயது தொடக் கம் மேடையேற்றுவதால் "கோபியா" எனப்படுகின்ற மனப்பயமும் நீங்குகிறது.

சிலர் நாகரிகத்திற்கேற்ப நடனத்தையும், நாகரிகத்திற்கேற்ப உடையையும் அணிந்து ஆடினால் தான் அந்த நடனம் மற்றவரால் ஈர்க்கப்படுமென்று நினைக்கின்றனர். அது தவறு! இசைக்கேற்ப உடலசை வைச் சரிவரக் காட்டினாலே அது இனிமையான நடனம். கவர்ச்சி உடை மூலம் நடனத்தை சுவாரசியப் படுத்தலா மென்று நினைப்பதால் தான் நாம் பலரது இச்சைக ளுக்கும், கொச்சைகளுக்கும் ஆளாகின்றோம். நடனம் புனிதமானது, எல்லோருக்கும் இயலுமானது, அதை வாழ்வெல்லாம் நமதாக்கிக் கொண்டால் ஆரோக்கியமும் எமதாகிவிடும்.......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மறக்கமுடியாத மனிதர்

பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் விடயங்கள் பலவுள. அவற்றுள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வோம்.

அவர் வித்தகர் விபுலானந்தரின் உத்தமச் சீடராக வாழ்ந்தார். எண்ணற்ற கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதித் தமிழ்ப்பணி புரிந்தவர். மதமாற்றம் தீவிரமாக இருந்த காலத்தில், அது ஒருவனுடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விஷயம் என்ற காரணத்தால் அதைத் தடுப்பதில் முன்னின்று உழைத்தவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவராக இருந்தார். ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக அரும்பணி ஆற்றினார். பாதயாத்திரை முதலிய சைவப் பணி புரிந்தார் என்பதெல்லாம் நம்மைப் பொறுத்தவரை அவருக்குப் புகழ் சேர்க்கும் விடயங்கள். ஆனால் அவரைப் பொறுத்தவரை அவை அற்ப விஷயங்கள். இவற்றை அவர் பெரிதாக மதித்ததே இல்லை. ஆனால், தமிழ் மண், தமிழ் மக்கள், தமிழ்த் தொண்டு என்ற விஷயங்களை அவர் பெரிதாக மதித்தார். எந்த ஒரு பிரச்சனையிலும் அது பொதுமக்களுக்கு எவ்வாறு உதவும் என்ற பார்வையில் தன் சிந்தனையைச் செலுத்தினார்.

தன்னலமற்ற வாழ்வுக்கு அடுத்தபடியாக அவரிடம் நாம் காணும் சிறந்த பண்பு அஞ்சாநெஞ்சம். இன்றைய காலகட்டத்தில் தமிழ்மக்களிடம் - ஏன் பொதுவாக எல்லா மக்களிடமுமே மிக அருகிக் காணும் தனிப்பண்பு இது.

வெள்ளைக்காரர் என்றால் விவேகிகள், கல்வித் திணைக்களம் என்றால் கற்கோட்டை என்று கருதப்பட்ட காலத்தில், கல்வி சம்பந்தமான பல பிரச்சனைகளிலும், மட்டுநகரில் தமிழர்க்கெனத் தனியாக ஒரு ஆசிரிய கலாசாலையை நிறுவவேண்டுமென்ற முயற்சியிலும், அஞ்சாநெஞ்சத்துடனும், தமிழ் ஆசான் என்ற பெருமிதத்துடனும் அவர் மேல் அதிகாரிகளுடன் பேசினார். தனது வாதத்திறமையினாலும் வாக்குத் திறமையினாலும் உரிமைகளை வென்றெடுத்தார்.

1958ம் ஆண்டு அவரசகால நிலைமையின் போது ராணுவத்தினர் கல்லடியிலுள்ள இந்துக் கோயில்களில் அத்துமீறிப் பிரவேசித்தும், இந்துக் குருமார்களை இம்சித்தும் அட்டுழியங்களைப் புரிந்தபோது, தன்னந்தனியனாய் கச்சேரிக்குச் சென்று ராணுவத் தளபதி கேணல் உடகமையுடன் ஆக்ரோஷமாக வாதாடி - தாழ்ந்து பணிந்து பிச்சை கேட்டு அல்ல - வழிபாட்டுத் தலங்களின் மகிமையை எடுத்துரைத்து - ராணுவ வீரர்களின் அட்டகாசத்தை நிறுத்தினார். தமிழ் மக்கள் வளைக்குள் புகுந்து கொண்ட எலிகளாக இருந்த போது அவர் இந்த வேலையைச் செய்தார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, அவருடைய நெஞ்சுறுதியை எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்ச்சி இது. இது போல் எத்தனையோ சம்பவங்கள் அவர் வாழ்வில் உண்டு. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்று முழக்கமிட்ட பாரதியாரை நினைவுறுத்தும் வகையில் வாழ்ந்தவர் இந்த மனிதர். அவருடன் பழகியவர்கள் அவர் உடையையும், நடையையும் பேசும் முறையையும் கண்டு இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்கள். ஒரு தமிழ்ப் பண்டிதர் இத்தகைய வீர உணர்ச்சியுடன் வாழ்ந்தது, அடங்கிக்கிடக்கும் இன்றைய தமிழ் மக்களுக்கு ஒரு சிறந்த போதனையாகும்.

பண்டிதர் அவர்கள் எழுதியவைகளோ ஏராளம். ஆனால் நூல் வடிவில் வந்தவை மிகச் சிலவே. விபுலானந்தர், சமயம், விவசாயம், கிராமிய இலக்கியம், இலக்கிய ஆய்வு, கண்ணகி வழிபாடு முதலிய பல துறைகளில் அவர் எழுதிய பல கட்டுரைகள், 'தினகரன்', 'வீரகேசரி' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. வானொலியில் பல பேச்சுக்கள் ஒலி பரப்பாகியுள்ளன. தமிழகத்தில் பிறக்கும் தமிழறிஞர்களுக்கு இருக்கும் பிரசுரவாய்ப்புக்கள் இலங்கையிலும் இருந்திருக்குமானால் இன்று ஒரு டாக்டர்.மு. வரதராசனாரைப் போல், தமிழ்த் தென்றல் வி.க.வைப்போல, ரா.பி. சேதுப் பிள்ளையைப் போல இவருடைய நூல்களும் ஏராளமாக வெளிவந்திருக்கும். ஆனால் ஈழத்துத் தமிழ் மக்களின் துர்அதிஷ்டம் அந்த வாய்ப்பு அன்றும் இல்லை இன்றும் இல்லை. "யாழ் நூல் தந்தோன்" என்ற தலைப்பில் பண்டிதர் எழதி வெளியிட்டுள்ள ஒரே ஒரு சிறு நூல் மட்டும் இன்று நமது கைக்குக் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதரின் மற்றொரு மாண்பு அவரது விவசாய ஈடுபாடாகும். படித்தவர்கள் பயிர்த்தொழிலை உதாசீனம் செய்த ஒரு காலகட்டத்தில் அதில் மிகுந்த விருப்போடு ஈடுபட்டதுமட்டுமன்றி தன் கீழ் பயின்ற மாணவர்களையும் மிகத் தீவிரமாக அதில் ஈடுபடச் செய்தார். மாலை வேளைகளில் ஒரு முழத்துண்டுடன் எருப்பெட்டியைச் சுமந்து செல்லும் பண்டிதர், ஆசிரிய கலாசாலையில் தூய வெள்ளை ஆடையில் குறுக்குச் சால்வையுடன் நிமிர்ந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

மட்டுநகர் ஆசிரியர் கலாசாலை பண்டிதருடைய செல்லக் குழந்தை. இதை நிறுவுவதில் முன்னின்று உழைத்ததுமட்டுமல்லாமல் அதன் ஆரம்ப காலத்தில் பல மாணவர்களைத் தன் வீட்டிலேயே தங்கியிருந்து படிக்கச் செய்தார். பின்னால் அமரர் வி. நல்லையாவின் முயற்சியால் ஆசிரியர் கலாசாலைக்கெனத் தனிக் கட்டிடம் ஒன்று உருவானது. பண்டிதருக்கு மிகவும் மனநிறைவைத் தந்த ஒரு நிகழ்ச்சி இது. இக்கால்லூரியில் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில், அவர் தம்மையே இக்கல்லூரிக்கு அர்ப்பணித்திருந்தார். இங்கு கல்வி பயின்ற ஆசிரிய மாணவ மாணவிகளைத் தமது சொந்தக் குழந்தைகள் போல் மதித்து நடந்தார். கல்லூரி நிர்வாகத்தில் அதிபர்கள் இவரது கருத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். இக்கல்லூரியிலிருந்து பண்டிதருடைய வாழ்க்கையைப் பிரித்துப் பார்க்க முடியாத அளவு அவர் இக்கல்லூரியுடன் ஒன்றிப் போயிருந்தார்.

இலகுவில் மறக்கமுடியாதது பண்டிதருடைய திருவுருவம், நெற்றியில் விபூதி, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, கணீரென்ற பேச்சு, கம்பீரக் குரல், காவியத் தமிழ் - இதுவே பண்டிதர் பூபாலப்பிள்ளை.

கல்லடியில் வாழ்ந்த பண்டிதர் பூபாலப்பிள்ளை சுவாமி விபுலானந்தரிடம் ஈடுபாடு கொண்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவரைத் தனது நெஞ்சக் கோயிலில் வைத்து எப்படிப் பூசித்தார் என்பதை அறியும்போது நமது மெய்சிலிர்க்கிறது. பண்டிதர் கூட்டங்களில் உரை நிகழ்த்து முன் பாடும் பின்வரும் பாடல் அதைக் கூறும்.

"ஆனந்தமேய விபுலானந்த அருட்குரவன்
தானந்தமில்லாத் தமிழ்த்தாய் பெறுநற்றனிமகவு
பூனந்தலில்லாத் திருந்தாளிற் புன்றலை பொற்புறவே
பானந்த வாழ்வு பெறவீழ்ந்து நாயேன் பணிகுவனே"

பண்டிதரின் குருபக்திக்கு இது ஓர் எடுத்துக் காட்டு. பண்டிதர், சுவாமி விபுலானந்தரைத் தெய்வமாகப் போற்றினார். இந்த ஈடுபாடு, விபுலானந்த அடிகளாரைப் போற்றிய திருக்கூட்டத்தில் பண்டிதர் பூபாலப் பிள்ளையைத் தனித்து நிற்கச் செய்கிறது.

அஞ்சா நெஞ்சமும், துணிச்சலும் கொண்ட பண்டிதரின் தனிப்பண்பை அவரது நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாமே பறைசாற்றி நிற்கும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதோ, முகத்துதி செய்வதோ, மூடிமறைத்துப் பேசுவதோ அவரிடம் கிஞ்சித்தும் கிடையாது. வெட்டொன்று துண்டு இரண்டு என்றபடி பேசும் அவரது இந்தத் தனிப்பண்பை புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை இப்படிக் கூறுகிறார்.

"உறைக்கப்பேசி சபை நடுவே
அஞ்சாதுண்மை நிறுத்துதற்காய்
மறைக்காதுள்ளக் கருத்தையெல்லாம்
வாரி வாரி வழங்கி நிற்பாய்
நிறைக்கோல் போன்று நாவுடையாய்
நின்னால் தமிழன் மனத்துணிவு
பிறக்கப் பிறக்கப் பீடு நடை
போட்டே செல்லும் பேறடைவான்
பிரிவாயோ நீ சைவ மக்கள்
பேதுற் றிரங்கப் பேசாமே!

பண்டிதரின் இன்னொரு சிறப்பம்சம், அவர் பெண்களை ஆண்களுடன் சரிநிகர் சமனாக நோக்கிய பாங்கு. அவரது காலத்தில் பாடசாலைகளிலும் பயிற்சிக் கல்லூரிகளிலும் பெண்களுக்கு எல்லாம் தனியாக இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி இருந்தது.

ஆனால் பண்டிதரோ பெண்கள் ஆண்களுடன் கலந்தே பழகவேண்டும் என்று வலியுறுத்தினார். அதைச் செயலிலும்காட்டினார். ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் பிற பாடசாலைகளிலும் இக்கருத்தைச் செயற்படுத்தினார். இதனால் தமிழ்ப் பண்பு கெட்டு விடும், பெண்கள் ஒழுக்கம் தவற நேரிடும் என்ற பத்தாம் பசலித்தனமான கூச்சல் போட்ட கட்டுப்பெட்டிகள் இன்று தமது கருத்தின் அபத்தத்தை உணர்ந்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

" ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்ற கருத்தை பண்டிதர் பூபாலப்பிள்ளை அன்றே செயற்படுத்தினார் என்பதை எண்ணிப் பார்க்கும் போது நெஞ்சம் புல்லரிக்கவே செய்கிறது. "இவ்வாறு ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற போது தான், உளவிருத்தியும், தம்மையாளும் திறமையும், சுய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையும் மாணவருக்குண்டாகும். இதுதான் நமது சமூகத்துக்கு வேண்டிய சரியான பயிற்சி" என்று பண்டிதர் கூறுவாராம். என்னே அவரது அகநோக்கு. - தூரதிருஷ்டி!

பெண்ணுரிமையைச் செயலிலும் காட்டும் பண்டிதரின் நேர்மைக்கு உதாரணமாக ஒரு சம்பவம். 1961ம் ஆண்டு மட்டக்களப்பில் கூடிய சைவசித்தாந்த விடுமுறைக் கழகக் கூட்டத்திற்கென தமிழகத்திலிருந்து அறிஞர் கி.வா.ஜகந்நாதன், புலவர் நா. முருகவேள் ஆகியோர் வரவழைக்கப்பட்டிருந்தனர். இக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு தமது சக விரிவுரையாளரும், வயதில் குறைந்தவருமான பண்டிதை கங்கேஸ்வரி கந்தையாவை அவர் பணித்தார். தமிழகத்தின் தலை சிறந்த சித்தாந்த மணிகள் பேசும் கூட்டத்திற்குத் தான் தலைமை வகிப்பதா எனப் பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா மறுத்துவிட்டார். ஆனால் பண்டிதரோ விடாப்பிடியாக அவரையே அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் செய்துவிட்டார்.

ஐம்பதுகளில் பண்டிதர்களும், புலவர்களும் மட்டக்களப்புக்கு நிறைந்த தமிழ்த் தொண்டாற்றினர். தமிழ்க்கலை மன்றம் என்ற அமைப்பில் தமிழறிஞர் குழாம் ஒன்று இயங்கி வந்தது. பண்டிதர் பூபாலப் பிள்ளை, பண்டிர் சபாபதிப்பிள்ளை, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, அருணாசல தேசிகமணி, வித்துவான் வி.சீ. கந்தையா, பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா, வித்துவான் சா.இ. கமலநாதன், வித்துவான் F.X.C. நடராசா முதலிய தமிழறிஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழ்ப்பணி புரிந்த பொற்காலம் அது. இக் காலத்தில் மட்டுநகரில் நடந்த இலக்கிய, சமய விழாக்களில் பண்டிதர் பூபாலப் பிள்ளை ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருப்பார். பேச்சாளராகவோ தலைமை வகிப்பவராகவோ இவர் பங்கேற்பார்.

1953ல் தமிழ்க் கலை மன்றத்தின் ஆண்டு விழா நடக்கவிருந்த சமயத்தில் இக் குழுவில் சிலர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் பங்கு பற்றச் சென்றுவிட்டனர். இதனால் தமிழ்க்கலை மன்றத்தின் தலைவர் பண்டிதர் சபாபதிப்பிள்ளை, சோர்ந்து விட்டார். ஆனால் அவருக்கு உற்சாகமூட்டி அவரை விழாவுக்குத் தலைமை தாங்கச் செய்து விழாவைப் பிரமாதமாக நடத்தி பண்டிதர் திரு.பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு 'புலவர்மணி' பட்டமும் சைவப்புலவர் அருணாசலத்திற்கு 'தேசிகமணி' என்ற பட்டமும் வழங்கச் செய்து, விழாவை நிறைவேற்றி வைப்பதில் பண்டிதர் பூபாலபிள்ளை பெரும்பங்கு கொண்டு உழைத்தார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் அமைந்த இந்த நிகழ்ச்சியைக் கொண்டு பண்டிதர் பூபாலப் பிள்ளையின் தமிழ்ப்பணியை ஒருவாறு எடைபோட்டுக் கொள்ளலாம்.

பண்டிதர் காலத்தில், பல பொதுப்பணிகளை நிறைவேற்றுவதற்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி. நல்லையா பண்டிதருக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். பண்டிதர் அவரிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் தனிப்பட்ட எந்த ஓர் உதவிக்கும் பண்டிதர் அவரை அணுகியதில்லை. ஆசிரிய கலாசாலை நிறுவுதல், போன்ற பொதுப்பணிகளுக்கே பண்டிதர் அவரிடம் போனார்.

இன்றைய அரசியல் வாதிகளையும், அவர்களுடைய ஆதரவாளர்கள் நடாத்தும் திருக்கூத்துக்ளையும் பார்க்கும்போது பண்டிதர் காலத்தில் நடந்த பொதுப்பணிகள் நம்மைப் பெருமூச்சுவிடச் செய்வதில் ஆச்சரியமே இல்லை.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னும், பண்டிதர் அவர்கள் தமது தமிழ்ப்பணியிலிருந்து ஓய்வு பெறவில்லை. சோர்வு என்பதையே அறியாத அவரது சுறுசுறுப்பு ஓய்வு பெற்ற பின் இன்னும் கூடியிருந்தது என்றே சொல்ல வேண்டும். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆண்டு விழாவைத் தமது அறுபத்தி நான்காவது வயதில் மட்டுநகரில் வெற்றிகரமாக நடாத்திக் காட்டினார். இறைவன் அதையே அவரது வாழ்வில் உச்சக்கட்ட நிகழ்ச்சியாக அமைந்துவிட்டார் போலும். இறுதியாக 26. 04. 67ல் அவரை இறைவன் தம்முடன் அழைத்துக்கொண்டார்.

தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் இவர் பிரிவை யொட்டி யாத்த ஆறு பாடல்களுள் முதல் பாடல் இது.

"நன்னாவலன் நயச் சொற்பொழிவாளன்.
இன்னாத சொல்ல எழா நாவான் கதிர்காமன்
தன்னாருயிர்த்த துணையென்றென்றே தனி
நினைப்பான்
பொன்னான அன்பன் பூபாலப்பிள்ளையன்றோ?

ஒரு மனிதனை நாம் நினைவு கூரும்போது, அவன் எங்கே பிறந்தான், என்ன பதவிகளை வகித்தான், என்ன சாதனைகளைச் செய்தான் என்ற விபரங்கள் முக்கியமானதல்ல. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியம். அந்த வகையில் ஆரையம்பதியில் பிறந்து மட்டுநகர் மண்ணில் தவழ்ந்து, ஈழம் முழுவதுக்குமே சொந்தமாகிவிட்ட அமரர் பண்டிதர் பூபாலபிள்ளை அவர்கள், தன்னலமற்ற வாழ்வு, தணியாத தமிழார்வம், ஓயாத உழைப்பு, ஒளியாத சேவை, ஆகிய நற்பண்புகளால் இன்றும் மக்கள் நெஞ்சில் வாழ்கிறார்.

அன்புமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

# மேடைப் பண்புகள்

பொது மேடைகளில் ஏறிப்பேசுவதில் பலருக்குத் தயக்கம்; சிலருக்கோ அது பெரும் இன்பம் தரும் செயற்பாடு. இந்த இரண்டாம் வகையினர் மேடையில் ஏறி ஒலிவாங்கியின் முன் நின்றனர் எனின், அவர்களை மேடையில் இருந்து இறக்குவது என்றால் ஏற்பாட்டாளர்களின்பாடு பெரும்பாடாகி விடும்.

அவர்களிலும் இருவகை யுண்டு, முதலாவது வகையினர் கருத்துச் செறிவுடன், நகைச்சுவையுடன் பேசி பார்வையாளர்களைக் கவர்ந் துவிடுவர்; அடுத்த வகையினர் என்ன பேசுகின்றோம், எதைப் பேசுகின்றோம் என்று கூடத் தீர்மானிக்காது வாயில் வந்தவையெல்லாம் பேசி பார்வையாளர்களை அறுத்து விடுவர்.

உண்மையில் மேடைப் பேச்சாளர்களுக்கு இயற்கையாகவே மேடைக்குரிய பண்புகள் வர வேண்டும் அல்லது அவர்கள் பயிற்சியின் மூலம் அப் பண்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வரவேற்புரை என்று மேடையில் ஏறுவார்கள், ஆனால் 'நன்றி' 'நன்றி' என்று நன்றியுரை ஆற்றி விடுவார்கள். நன்றியுரை என்று மேடை யில் ஏறுவார்கள் ஆனால் சிற்றுரையாற்றி விடுவார்கள்.

1983ம் ஆண்டு ஓர் ஆசிரியர் கிராமப்புறப் பாடசாலையொன்றுக்கு முதல் நியமனம் பெற்றுச் சென்றார். அவர் அப் பாடசாலையில் 'இலக்கிய மன்றம்' ஒன்றை ஆரம்பித்தார். இலக்கிய மன்றத் தலைவராக க.பொ.த. (சா.த) மாணவன் ஒருவன் தெரிந்தெடுக்கப்பட்டான். இம்மாணவன் உள்ளூர்க் கோவில் திருவிழாக்களில் அறிவிப்பாளராகவும் கடைமையாற்றுபவன். "............ என்பவர் எங்கிருந்தாலும் கோவில் காரியாலயத்திற்கு உடனடியாக வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்" என்று அடிக்கடி ஒலி பெருக்கியில் கூவிப் பழக்கப்பட்டவன்.

அன்று முதலாவது 'இலக்கிய மன்றக் கூட்டம்'. பாடசாலை சிறு மண்டப மேடையில் தலைவர், செயலாளர், பொறுப்பாசிரியர் என்போர் அமர்ந்திருந்தனர். மேடையின் முன்னே முதலாவது வரிசையில் கடவுள் வாழ்த்துப் பாடவேண்டிய மாணவன் அமர்ந்திருந்தான். அவனை தலைவர் அழைக்க வேண்டிய நேரம் வந்தது. உடனே தலைவர் எழுந்து, கையில் இருந்த கூட்டறிக்கைக் 'கொப்பி'யைச் சுருட்டி எடுத்து ஒலிவாங்கி மாதிரி பிடித்துக் கொண்டு பின்வருமாறு கூறினார். "கடவுள் வாழ்த்துப் பாடவேண்டிய ...........என்பவர் எங்கிருந்தாலும் உடனடியாக மேடைக்கு வருமாறு அழைக்கப்படுகின்றார்". கோவில்களில் அறிவித்தல் செய்த பழக்கம் பாடசாலை மண்டபத்திலும்வந்து விட்டது. எனவே மாணவர்களை இலக்கிய மேடைகளில் பயிற்றுவிக்க வேண்டிய அவசியம் பற்றி அவ்வாசிரியர் புரிந்து கொண்டார்.

இவ்வாறே இன்னுமொரு சம்பவம். இது ஓர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை. முத்தமிழ் மன்ற முதலாவது கூட்ட இறுதி நிகழ்வு. செயலாளர் நன்றி சொல்ல அழைக்கப்படுகின்றார். மேடையில் எழும்பிய செயலாளர் 'சங்கம் வளர்த்த காலத்திலே ..." என்று தொடங்கி சேர,சோழ,பாண்டிய, பல்லவர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர நன்றியுரை சொல்லவேயில்லை. பொறுமையிழந்த இன்னொரு ஆசிரியமாணவர் மேடைக்கு ஓடிச்சென்று இரத்தத் திலகம் இடும் பாணியில் சிவப்பு மையினால் திலகம் இட்டார். செயலாளர் குறியீட்டைப் புரிந்து கொள்ளவேயில்லை, உற்சாகமாகப் பேசத் தொடங்கி விட்டார். தொடர்ந்து பார்வையாளர்கள் ஆளை இறக்குவதற்காகக் கைதட்டத் தொடங்கி விட்டனர். அதுவும் அவருக்குப் புரியவில்லை: பாராட்டு என நினைத்து வீறுகொண்டு பேச்சைத் தொடர்ந்து கொண்டு சென்றார்.

எனவே மேடைப் பண்புகளை அனைவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இன்னும் சிலர் பேசும் போது தலைவரை முதலில் விளித்து ஆரம்பிப்பதேயில்லை; பிரதம் அதிதிகளைத்தான் விளிப்பார்கள். சாதாரண பாமரனாக இருப்பினும் தலைவருக்குத் தான் முதலிடம் என்பதை அவர்கள் உணர்வதே இல்லை என்பது தான் வேதனை.

### மன்னார் மறைமாவட்ட 22வது ஆண்டு விழா

மன்னார் மறை மாவட்டத்தின் 22வது ஆண்டு நிறைவு விழா கடந்த ஜனவரி மாதம் 25ம் திகதி தோட்ட வெளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் பங்கேற்ற இவ் விழாவுக்கு குரு முதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் தலைமை வகித்தார். தோட்டவெளி பங்குத் தந்தை கிறிஸ்ரியன்வாஸ் அடிகளார் இவ்விழாவுக்கான பூர்வாங்க ஆயத்தங்களை மேற் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த ஜனவரி மாதம் பிலிப்பைன்சின் தலைநகரான மணிலாவில் நடைபெற்ற குடும்பங்களுக்கான அனைத் துலக மகாநாட்டில் திரு/ மட். மறைமாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட திரு - திருமதி பி. அருளானந்தம் - தேவமலர் தம்பதியினர் தமது மகாநாட்டு அனுபவங்களை இங்கே தருகின்றனர்.)**

குடும்பம் என்பது திருமணம் என்னும் திருச் சடங்கின் மூலம் தரப்படும் இறைவனின் கொடை அது ஒவ்வொருவரையும் இறைவன் வகுத்த திட்டத் தின்படி உண்மையான அர்த்தத்துடன் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, குடும்பப் பாத்திரங்கள் என்னும் பொறுப் பில் பங்கு ஏற்க, நற்செய்தியைப்பரப்ப, அடிப்படை அலகாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு குட்டித் திருச் சபையாகும். எனவே, கிறீஸ்தவக் குடும்பம் நற்செய் தியாக விளங்கவும், உலகம் முழுவதும் ஆண்டவரின்

மூன்றாவது மகாநாடு 2000ம் ஆண்டு ஒக்டோபர் 12 முதல் 15 ம் நாள் வரை ரோமாபுரியில் நடை பெற்றது. இதன் தொனிப்பொருளாக "குடும்பத்திற்கும் சமுதாயத் திற்கும் பிள்ளைகளே வசந்த காலம்" (Children Spring time the Family and society) என்பது அமைந் திருந்தது! சுமார் ஐயாயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மகாநாட்டில் 'இறைவனின் கொடைதான் பிள்ளை கள்; அவர்களை உண்மையான, உகந்த பிள்ளைகளாக உருவாக்குவது முக்கியம் என்பது வலியுறுத்தப் பட்டது.

நாம் கலந்து கொண்ட நான்காவது உலக மகாநாடு திருத்தந்தையின் தெரிவான, "கிறிஸ்தவக் குடும்பம் மூவாயிரமாம் ஆண்டின் நற்செய்தியாக மிளிரட்டும்"என்னும் தலைபபைக் கொண்டிருந்தது.

ஆசியாவின் ஒரே கத்தோலிக்க நாடான பிலிப்பைன்சின் மணிலா மாநகரில் 2003 ஜனவரி 22 முதல் 26 வரை நடைபெற்ற இம் மகாநாடு பரிசுத்த ஆவியின் வழி

# பிலிப்பைன்சில் நடைபெற்ற நான்காவது
# "குடும்ப உலக மகாநாடு"

கதவுளைத் திறக்கவும், அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் கொண்டுவர காரணகருவாக உருவாகவும் வேண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

முதலாவது குடும்ப உலக மகாநாடு 1994ம் ஆண்டில், ஒக் டோபர் 8ம் 9ம் நாட்களில் உரோமில் நடைபெற்றது. அதன் தொனிப் பொருள் 'குடும்பம் அன்பின், கலா சாரத்தின் இதயம்' என்னும் கருத் தைக் கொண்டதாக இருந்தது. (The Family Heart of the Civilization of Love) அம் மகாநாட்டில் நூறு நாடு களிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பங்கு பற்றின.



இடமிருந்து வலமாக திரு. P. அருளானந்தம் தம்பதியினர்

இரண்டாவது மகாநாடு 1997ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 முதல் 5ம் நாள் வரை பிரேசிலில் றியோடி ஜெனரோ நகரில் நடைபெற்றது. அதன் தொனிப்பொருள் "குடும்பம் மனிதத்தின் நம்பிக்கையும், அர்ப்பணிப்பும் கொடையுமாகும்" (Family Gift and Commitment, Hope for Humanity) நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளி லிருந்து இரண்டாயிரத்தி ஐநூறுக்கும் அதிகமான பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.

நடத்தலுடனும் தெய்வீக உணர்வுடனும், ஆன்மீகத் திருப்தியுடனும் நடைபெற்றது.

1995ம் ஆண்டு மணிலாவில் மறைமாவட்ட கால் நூற்றாண்டு விழா நடைபெற்றபோது திருத் தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் பிலிப்பைன்ஸ் மக்களை, உலகிற்கும் ஆசியாவிற்கும் கலங்கரை விளக்காக விசுவாசத்தில் தொடர்ந்து வழிகாட்டக் கேட்டுக் கொண்ட தற்கிணங்க அவர்களும், அவரது நம்பிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவூட்டி, உறுதியான இறையன்போடு நிறை வேற்றினர். மணிலா நகர், ஆசியாவின் முதல் தெரி வாகக் கணிக்கப்பட்டது. இதற்கு அமைய "சர்வதேச இறையியல் மேய்ப்புப் பணிச் சபையின் (Inter natioanl Theological and pastoral congress) அனுசரணையுடன் பிலிப்பைன்ஸ் சர்வதேச மாநாட்டு நடுநிலையத்தில் (Philippines, Internatioal Convention centre) கோலாக லமாவும் வெற்றிகரமாகவும் இறைவனின் சித்தமும் திருத்தந்தையின் விருப்பமும் நிறைவேற நடைபெற்றது.

22, 23, 24ம் நாட்களில் பல்வேறு தலைப்புகளை மையமாகவைத்து (குடும்பப் பொறுப்பு, நற்செய்தி பரப்புதல், குடும்ப அப்போஸ்தொலிக்கப் பணி) மதத்த லைர்களாலும், பல்வேறு அனுபவங்களைக் கொண்ட குடும்ப அங்கத்தவர்களாலும் பயனுள்ள உரைகள் வழங் கப்பட்டன.

22ம் திகதி: திருப்பலியோடு தொடங்கி "இன் றைய கிறிஸ்தவக் குடும்பம் பல்வகை கலாசார நற் செய்தி பரப்புதலைக் கொண்டது" என்னும் தலைப்பை முன்வைத்து நடத்தப்பட்டது.

23ம் திகதி: "குடும்ப அப்போஸ்தலிக்கப் பணி மேலும் புதிய அமைப்புக்களை உருவாக்குவதுடன் மேம்படுத்தப்படுவது அவசியம்" என்னும் பொருளில் அமைந்தது. முடிவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது.

24ம் திகதி: நற்செய்தி பரப்பும் போது ஏற்ப டும் சவால்கள், எதிர்ப்புகளை முகம் கொடுத்துத் தீர்ப்பது பற்றி அனுபவசாலிகள் தங்கள் வாழ்கைச் சான்று களைப் பகிர்ந்து கொண்டனர். இறுதியில் திருப்பலி, இலத்தீன் மொழியில் பொது ஆராதனையாக நிறை வேற்றப்பட்டது.

எமது நாட்டைச் சேர்ந்த பேராயர் அதிவணக் கத்துக்குரிய ஒஸ்வோல்ட் கோமிஸ் அவர்கள் ஆசிய ஆயர் பேரவையின் செயலாளர் என்ற வகையில் பத்து நிமிடங்களுக்குச் செய்தியொன்றை வழங்கினார்.

25ம் திகதி: குடும்ப யாத்திரை ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது; காலை 8.00 மணி அளவில் போக்குவரத்துக்கான வாகனப் பொறுப்பாளர், பங்கெடுத்த பிரதிநிதிகளை, தெரிவு செய்யப்பட்ட பதினாறு பங்கு ஆலயங்களுக்கு வாகனங்களில் உற்சாகத்துடன் அனுப்பி வைத்தார். நாமும் ஆங்கில மொழி தெரிந்த நாடுகளு டன் இணைந்து மணிலா, புனித பெர்னான்டோ டி டெலோ பங்குக்குச் சென்றோம். அங்கு எல்லோரும் புத்துணர்வோடும் உள்ளன்போடும் வரவேற்றனர். உயிர்ப்பான திருப்பலியில் எம்மையும் பங்கு பற்ற வைத்தனர். முடிவில் தமக்கே உரிய விருந்தோம்பலு டன், கலை கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடத்தி மகிழ் வித்தனர். அன்று 2.00 மணியிலிருந்து மணிலாவிலுள்ள "லுனேற்றா" (Luneta) என்னும் திறந்த வெளி அரங் கில் ஆன்மீக ரீதியாக உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஐந்து மணியளவிலிருந்து 8.00 மணி வரை திருத்தந்தை வத்திக்கான் நகரிலிருந்து நேரடி யாக ஒளிபரப்பு மூலம் செய்தி வழங்கியதும், குடும் பங்கள் தத்தம் வாழ்க்கை நற்சான்றுகளைப் பகிர்ந்து கொண்டதும் மக்களின் மனதில் விசுவாசத்தைப் பலப் படுத்துவதாக அமைந்ததோடு திருத் தந்தையின் ஆசீர் அனைவருக்கும் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது, அதன்பின் அலங்கார வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ச்சியாக அதிகாலை 5.00 மணி வரை திருவிழிப்பு வழிபாடுகள் பக்தியுடன் நடந்தன.

26ம் திகதி ஞாயிறு காலை 7.00 மணிக்கு திருத்தந்தையின் பிரதிநிதியின்தலைமையில் 1000 இறைபணியாளர்கள் ஒருங்கிணைந்து திருப்பலி நிறை வேற்றினர். அதற்குமுன் 1565ம் ஆண்டு செபு (Sebu) தீவிலிருந்து போர் வீரனொருவனால் கண்டெடுக்கப் பட்ட குழந்தை யேசுவின் திருவுருவம் மக்களால் 'பாண்ட்' வாத்தியங்களுடன் பவனியாக எடுத்து வரப்பட்டது. இதன் போது அவர்களது விசுவாசத்தையும், கலாச்சா ரத்தையும் நன்றியையும் வெளிப்படுத்துமாப் போல் நடனமும் வரவேற்புப் பாடலும் இடம் பெற்றன.

.இறுதியாக இடம் பெற்ற திருப்பலி, பிலிப் பைன்ஸ், ஆங்கில மொழிகளில் கூட்டாக நிறைவேற்றப் பட்டது!. வேண்டுதல்கள் ஏழு மொழிகளில் குடும்ப அங்கத்தவர்களால் இறைவனிடம் கோரப்பட்டன. திருப்பலியின் முடிவில் இறை ஆசீர் வழங்கப்பட்டு மக்களனைவரும் மனநிறைவுடன் மகாநாட்டுத் தொனிப் பொருளைக்கொண்ட கீதத்தை இசையுடன் பாடி தமது மகிழ்ச்சியை அன்புடன் பகிர்ந்து கொண்டனர்.

நடந்து முடிந்த இக்குடும்ப மகாநாட்டின் ஆரம்பக்கட்டமாக பிரதிநிதிகள் அனைருக்கும் விசேட சபைத் தொண்டர்களினால் அமோக வரவேற்பு அளிக் கப்பட்டது. பின் ஏற்ற இடவசதி ஒழுங்குபடுத்தி, போக்கு வரத்து, உணவு உட்பட அனைத்துத் தேவைகளும் கவனிக்கப்பட்டு, உடல், உள, சமூக, ஆன்மீக, கலாச்சார, நிறைவுடன் விமான நிலையத்துக்கு அழைத்துச் செல் லப்பட்டு வழியனுப்பி வைக்கப்பட்டனர். இம் மகா நாட்டில் நாம் கலந்து கொள்ளக்கிடைத்த வாய்ப்பு இறைவன் அருளிய அரும்பெரும் கொடையென நம்பு கிறோம். இதற்காக முதலில் இறைவனுக்கும், இறை அருளால் இதனை வழங்கிய எமது மறை மாவட்ட ஆயருக்கும் நன்றி கூறுகிறோம்.

**திரு.திருமதி பி. அருளானந்தம் - தேவமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுப்போட்டி !

## பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி :- 30 . 04 . 2003



## விவிலியம் கற்போம் - 23

# எகிப்தில் இஸ்ராயேலரின் அடிமை வாழ்க்கை

*(விடுதலைப் பயணம் 1: 1–22)*

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யாக்கோப்பின் புதலவர்கள் ................................................. குடியேறி, வாழ்ந்து வரும் போது, யோசேப்பும் அவருடைய எல்லாச் சகோதரர்களும் அந்தத் தலை முறையினர் அனைவரும் இறந்து போயினர். நாளடைவில் இஸ்ராயேல் மக்கள் குழந்தை ............................................. பெற்றுப் ............................................. பெருகி எண்ணிக்கையில் உயர்ந்தனர்; ............................................. மென்மேலும் வளர்ந்தனர்; இதனால் அந்த நாடே அவர்களால் நிறைந்துவிட்டது. அது அவ்வாறிருக்க, யோசேப்பின் குடும்பத்தாரை முன் பின் அறியாத ............................................. மன்னன் ஒருவன் எகிப்பதில் தோன்றினான். அவன் இஸ்ராயேல் மக்கள் பெருகுவதைக் கண்டு மக்களிடம், இஸ்ராயேல் மக்கள் பெருகிவிடாதபடி ............................................. செயல்பட வேண்டும். போர் ஏற்படுமானால் இவர்கள் எதிரிகளுடன் சேர்ந்து ............................................. எதிர்ப்பார்கள், இந்த நாட்டிலிருந்தும் வெளியேறிவிடுவார்கள், என்றான். எனவே ............................................. வேலையால் அவர்களை ஒடுக்கும் படியும், அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளையும் அவர்கள் மேல் நியமித்தான். இப்படியாக ............................................. வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தார்கள். ஆனாலும் இஸ்ராயேல் மக்கள் மேலும் பெருகுவகைத் தடுக்க முடியவில்லை. ஆகவே, இஸ்ராயேலரின் மருத்துவப் பெண்களை அழைத்து, எபிரேயருக்கு ஆண் மகவு பிறந்தால் கொன்று விடும்படியும் பெண் மகவு பிறநதால் வாழவிடும் படியும் கட்டளையிட்டனர். ஆனாலும் கடவுளுக்குப் பயந்த மருத்துவப் பெண்கள் அவ்வாறு செய்யவில்லை. இதனால் கோபமுற்ற மன்னன், பிறக்கும் ............................................. ஆண் மகவு அனைத்தையும் ............................................. நதியில் எறிந்துவிடும்படி அறிவித்தான்.

**விடைகள்:-** நைல், ஆள்பலத்தில், எபிரேய, பலுகி, புதிய, அவர்கள், எகிப்தில், கடும், வளம், தந்திரமாக, நம்மை.

**(வினாப்படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும். வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி
30 - 04 - 2003

# பரிசுப்போட்டி!



## அறிவை வளர்ப்போம் - 23

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

1) இஸ்லாமியர்களின் புனித இடமான 'மெக்கா' உள்ள நாடு
(ஜோர்தான், ஈரான், சவூதி அரேபியா)

2) தத்துவஞானி அரிஸ்டோட்டில் வாழ்ந்த நாட்டின் பெயர்
(கிறீஸ், பிரித்தானியா, இத்தாலி)

3) பழகப் பழக ...................................................... !
(பாலும் இனிக்கும், பாலும் கசக்கும், பாலும் புளிக்கும்)

4) 'இன்று போய் நாளை வா' என இயம்பிய இதிகாச வீரன்
(இராவணன், இராமன், தருமன்)


5) இறுதியாக நடைபெற்ற உலகக் கிண்ண கிறிக்கட் சுற்றுப் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?
(தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து)

6) விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம் - போட்டி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.
(1999, 2000, 2001)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................
..............................................................................
..............................................................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**
விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம் - 23
தொண்டன்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் 21 விடைகள்



குடியேறி, யாக்கோப்பு, நெருங்கி, வரவழைத்து, நான், சென்று, செய்வேன், உடல், என் அருகில், தலைமகன்

## அறிவை வளர்ப்போம் 21 விடைகள்

1) கார்ல்மார்க்ஸ் 2) துரோணர் 3) தூற்றிக்கொள் 4) சீனா 5) ஷேவக் 6) ராஜாஜி

போட்டிகளின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை ஒருவர் மட்டுமே எழுதி பரிசு பெறுகிறார்.

### 100/= பரிசு பெறுவோர்

**J. திமறின் சுதேஷினி**
21/3, முனை வீதி
மட்டக்களப்பு.



### 50/= பரிசு பெறுவோார்

**S. நிராஜ்**
16, சின்ன உப்போடை
மட்டக்களப்பு

**பிரகாஷ் பிரதீப்காந்**
இல: 04,
புனித செபஸ்தியார் வீதி
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்.

**M. சாள்ஸ் ஜெயகாந்**
இல: 01, புளியடி ஒழுங்கை
கல்லடித் தெரு
மட்டக்களப்பு.

**தே. எலிசபெத்**
திருக்குடும்பத் கன்னியர் இல்லம்
151, திருமலை வீதி
மட்டக்களப்பு.

போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும்
**எமது நன்றிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்...

## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் ஏப்ரல் - 2003

**கத்தோலிக்க நற்சிந்தனைகள்** - காலை 5.50 மணி
நாள்கள்: 5, 6 , 7, 8, 9 , 10, 11, 19, 20, 21, 22, 23, 24, 25


**சிறுவர் நிகழ்ச்சிகள்** - மாலை 7.45 மணி
நாள்கள் : 01, 15, 29

**வளர்ந்தோர் நிகழ்ச்சிகள்** - மாலை 7.00 மணி

**நாள்கள் :** 13, 27

**தவக்கால - புனித வார சிறப்பு நிகழ்ச்சிகள்**

**நாள்கள்:** 4, 11, தவக்கால வெள்ளி சிறப்பு மலர்
13 ~ குருத்து ஞாயிறு ~ ஸ்ரான்லீ பிரபாகரன் குழுவினர், மட்டக்களப்பு.
18 ~ பெரிய வெள்ளி ~ திருமறைக் கலாமன்றம்
17 ~ புனித வியாழன் } T. அலோசியஸ் குழுவினர், மட்டக்களப்பு.
20 ~ உயிர்ப்பு ஞாயிறு } T. அலோசியஸ் குழுவினர், மட்டக்களப்பு.
19 ~ புனித சனி - போல் பிரகாஷ் குழுவினர் -திருகோணமலை



நிகழ்ச்சித் தொகுப்பு
**மலர்வேந்தன்**

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Desiginig - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org